# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 26.04.2022 supeedsam.com supeedsam@gmail.com







## 120 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு எதிராக உள்ளதால்

# அரசு பதவி விலக ஒரு வாரகால அவகாசம்



பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்படுதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு தாம் உள்ளிட்ட 120 உறுப்பினர்களின் ஆதரவு காணப்படுவதன் காரணமாக இந்த கால அவகாசம் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று (25) பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

## 21 ஆவது திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கிகாரம்

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் அளித்துள்ளதுடன், இதற்காக ஒரு உப குழுவையும் நியமித்துள்ளது.

புதிய அமைச்சரவை இன்றையதினம் கூடியபோது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் முன்மொழியப்பட்ட யோசனைக்கே அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான புதிய சீர்திருத்தங்கள், 20 மற்றும் 19ஆவது திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டே 21ஆவது திருத்தம் அமையவுள்ளது.

# இன்று சரித்திரம் காணாத மாபெரும் ஆர்ப்பாட்டம்

## கண்டியிலிருந்து கோழும்பை நோக்கி படையெடுக்கிறது

ஜனாதிபதி பதவிவிலகவேண்டும் என்பதற்கான அழுத்தங்களை கொடுப்பதற்காக இன்று முதல் ஐக்கிய மக்கள் சக்தி வீதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹபீன்பெர்ணாண்டோ இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சரித்திரத்தில்லாத மிகப்பெரிய ஆர்ப்பாட்ட பேரணி இன்று கண்டியில் ஆரம்பமாகும்என அவர் தெரிவித்துள்ளார்.

தலதா மாளிகையில் வழிபாடு செய்த பின்னர் நாங்கள் ஆர்ப்பாட்ட பேரணியை ஆரம்பிப்போம் மே முதலாம் திகதி கொழும்பை வந்தடைவோம் என ஹபீன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும்

02 ஆம் பக்கத்தில்...

## மீண்டும் அதிகரித்தது சீமெந்தின் விலை!!

50 கிலோ கிராம் எடைக் கொண்ட சீமெந்து ஒன்றின் விலை 400 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி, புதிய 50 கிலோ கிராம் சீமெந்து ஒன்றின் புதிய விலை 2 750 ரூபாவாகும்.

இந்த விலை அதிகரிப்பானது இன்று முதல் அமுலாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீமெந்து உற்பத்தி மற்றும் இறக்குமதியாளர் சங்கம் இதனை தெரிவித்துள்ளது.

# வியாழேந்திரன் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்




(மட்டுநிருபர்)

இராஜங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் இடம்பெற்ற துப்பாக்கி சூடு சம்பவத்தில் உயிரிழந்த மகாலிங்கம் பாலசுந்தரத்தின் 36 வது பிறந்த தினத்தையிட்டு அவருக்கு நீதிவேண்டி அமைச்சரின் வீட்டுக்கு முன்னால் நேற்று (25) ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வருடம் யூன் 21 ம் திகதி அமைச்சரின்

02 ஆம் பக்கத்தில்...

# ஹக்கீமின் இரட்டை வேடம்

## ஹாபிஸ் நசீர் அவசரக் கடிதம்



(ந.குகதர்சன்)

2020 ஆகஸ்ட் 05 ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றி பெற்று இரண்டு மாதங்களுக்கு பின் 2020 ஒக்டோபர் மாத மளவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) யின் வேட்புமனுவினூடாக தற்போதைய பாராளுமன்றத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரான என்னை, தற்போது அதிகாரத்தில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு சமகி ஜன பலவேகய (SJB) வின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அவர்களின் தீர்மானமே காரணமாகும்.

02 ஆம் பக்கத்தில்...

# தற்போதைய நெருக்கடிக்கு 3 நாட்களில் தீர்வுகாண முடியும்

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக மக்கள் கோரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால் இடைக்கால தேசிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என நாட்டைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் வண. எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இன்று நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில்

02 ஆம் பக்கத்தில்...

## அரசுக்கு எதிராக ஜீவன் தோண்டமான்

பாராளுமன்றத்தில் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் அரசாங்கத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் வாக்களிக்க தமது கட்சி தீர்மானித்துள்ளதாக

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஒய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302



Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma 34598 25605: cicero


# ஜனாதிபதி செயலகத்திற்கு முன் சவப்பெட்டி எரித்து போராட்டம்



கொழும்பு- காலி முகத்திடல் மைதானத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் நேற்று திங்கட்கிழமை (25) சவப்பெட்டிக்கு தீ வைத்து போராட்டம் நடத்தியுள்ளனர்.

குறித்த இளைஞர்கள் குழு அரச தலைவர் செயலகத்திற்கு முன்பாக சவப்பெட்டியை எரித்து

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# எங்களுக்கு சிறிது கால அவகாசம் வழங்குங்கள்

## ஜனாதிபதி கோரிக்கை!



தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக் கூறவேண்டியுள்ளதுடன் தற்காலிக மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவதற்கான முறையான அணுகுமுறையை எங்கள் அரசாங்கம் தற்போது மேற்கொண்டுள்ளதால், பலன்களை பெற்றுக்கொள்ள எங்களுக்கு சிறிது கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மூன்று நிக்காயாக்களினதும் தலைமை பீடாதிபதிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இன்று(திங்கட்கிழமை) அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை விரைவில் தீர்ப்பது தொடர்பாக, மூன்று நிக்காயாக்களினதும் தலைமை பீடாதிபதிகள் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாக,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் உடனடியாக தீர்ப்பது தொடர்பில் 04.20.2022ஆம் திகதியிடப்பட்டு எனக்கும், பிரதமருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பிய கடிதம் தொடர்பில்

நீங்கள் முன்பு எனக்கு அனுப்பிய, அதாவது ஏப்ரல் 4, 2022 அன்று சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் உள்ளடக்கத்தை நான் எந்த வகையிலும் புறக்கணிக்கவில்லை என்பதை முதலில் மரியாதையுடனும், அன்புடனும் ஒப்புக்கொள்கிறேன்.

நீங்கள் சுட்டிக் காட்டியது போல், நாட்டில் ஏற்பட்டுள்ள உடனடி பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண நாங்கள் ஏற்கனவே பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

மக்கள் எதிர்கொள்ளும் மிகவும் கடினமான வாழ்க்கை நிலைமைகளைப் பற்றி நான் புரிந்து கொள்ளாமல் இல்லை. தினசரி, புள்ளி விவரங்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் நிபுணர்களின் உதவியுடன் நான் அமைச்சரவையுடன் இணைந்து பணியாற்றுவேன் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதன்படி, பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவு, மருந்து, வீட்டு எரிவாயு மற்றும் பல்வேறு எரிபொருள்கள் வழங்குவதற்கான திட்டங்கள் ஏற்கனவே தீவிர கண்காணிப்பில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, என்னால் நியமிக்கப்பட்ட புதிய நிதியமைச்சர், மத்திய வங்கியின் புதிய ஆளுநர் மற்றும் திறைசேரியின் புதிய செயலாளர் ஆகியோர் சர்வதேச நிதி நிபுணர்களின் வழிகாட்டுதலின் கீழ், சம்பந்தப்பட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுடனும் நட்பு நாடுகளுடனும் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்து வருகின்றனர்.

இதன் விளைவாக, சர்வதேச நாணய நிதியம் மற்றும் இந்திய அரசு ஏற்கனவே நேர்மறையான பதிலை அளித்துள்ளதுடன், மேலும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அடுத்த சில வாரங்களில் நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை எதிர்வரும் சில வாரங்களில் தற்காலிக தீர்வுக்கு செல்ல முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் புதிய அரசியலமைப்பை உருவாக்க சட்ட நிபுணர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. குழுவின் உறுப்பினர்கள்:

- **ஜனாதிபதி சட்டத்தரணி திரு.ரொமேஷ் டி சில்வா - தலைவர்**
- **ஓய்வுபெற்ற பேராசிரியர் ஜி.எச். பீரிஸ்**
- **நீதிபதி திரு. ஏ. டபிள்யூ.ஏ. சலாம்**
- **ஜனாதிபதி சட்டத்தரணி திரு. மனோகார டி சில்வா**
- **ஜனாதிபதி சட்டத்தரணி திரு. சஞ்சீவ ஜயவர்தன**
- **ஜனாதிபதி சட்டத்தரணி திரு. சமந்த ரத்வத்தே**
- **பேராசிரியர் ஏ. சர்வேஸ்வரன்**
- **பேராசிரியர் டபிள்யூ. செனவிரத்ன**
- **ஜனாதிபதி சட்டத்தரணி திரு. நவீன் மாரப்பன**
- **திருமதி கௌசல்ய மொல்லிகொட - செயலாளர்**

இந்தக் குழு சுமார் இரண்டு வருடங்களாக பல்வேறு அரசியல் கட்சிகள், பல்வேறு குழுக்கள் மற்றும் நிபுணர்களுடன் விரிவாக கலந்துரையாடி புதிய அரசியலமைப்பு ஒன்றுக்கான வரைவுகளை தயாரித்து வருகின்றது. அந்த வரைவுகள் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டு வருவதாகவும் குழு எனக்கு தெரிவித்துள்ளது.

இவ்வாறாக தயாரிக்கப்பட்ட வரைபு கிடைக்கப்பெற்றவுடன் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகாரத்தின் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வரைவின் நகலை உங்களுக்கு அனுப்புகிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில், நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதில் நான் உறுதியாக உள்ளேன். நீங்கள் குறிப்பிட்டுள்ள அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு நான் ஆதரவளிப்பதாகவும், பாராளுமன்றத்தில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டால், ஜனாதிபதியும் பாராளுமன்றமும் இணைந்து அத்தகைய திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் அன்புடன் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

மேலும் நாட்டின் தற்போதைய நிலைமைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு தமது பங்களிப்புகளை எதிர்பார்த்து அனைத்துக் கட்சி மாநாட்டிற்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டும், அமைச்சு பதவிகளை ஏற்றுக்கொண்டு நாடு எதிர்கொண்டுள்ள நிலையில் இருந்து மீட்டெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தூய்மையான எண்ணத்துடன் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை என்பதும் வருத்தமளிக்கிறது. இருப்பினும், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் எனது அழைப்பு அவ்வாறே உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் என்ன செய்தாலும், அனைத்து செயல்முறைகளும் அரசியலமைப்பிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் மற்றும் தற்போதைய அரசியலமைப்பிற்குள் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும். எனவே, உங்களது முன்மொழிவுகளையோ அல்லது மக்களின் அபிலாஷைகளையோ நானோ அல்லது எமது அரசாங்கமோ எக்காலத்திலும் புறக்கணிக்கமாட்டோம் என்பதை நினைவுபடுத்துகின்றேன்.

அமைச்சரவை இல்லாமல் ஒரு நாட்டின் நிர்வாகத்தை நடத்த முடியாது. மேலும், அமைச்சரவை இல்லாதது நடைமுறைச்சாத்தியமற்றது. அதன்படி, மூத்த அமைச்சர்களின் உதவியுடன் பெரும்பான்மையான இளம் உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையை நான் நியமித்தேன்.

மக்களின் தற்போதைய பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வைக் காண்பதற்காக குறுகிய காலத்திற்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன என்பதை நான் மரியாதையுடன் குறிப்பிடுகிறேன்.

எனது பதவிக்காலத்தின் இரண்டரை வருடங்களில், பல்வேறு அரசியல் கட்சிகள், பல்வேறு இனக்குழுக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் நடத்திய போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், சாலை மறியல் போன்றவற்றில் நான் தடியடியோ, கண்ணீர்ப்புகையோ பிரயோகிக்கவில்லை. பொதுவாக இவ்வாறான போராட்டங்களை நசுக்குவதற்கு எமது அரசாங்கம் எதனையும் செய்யவில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். எனது அலுவலகத்திற்கு முன்பாக நடத்தப்பட போராட்டம் அல்லது ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்த காவல்துறை / ஆயுதப் படைகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்துவது போன்ற அடக்குமுறை நடவடிக்கைகள் பின்பற்றப்படவில்லை என்பதை மரியாதையுடன் நினைவுபடுத்துகிறேன்.

19.04.2022 அன்று பொதுமக்கள் போராட்டத்தின் போது நடந்த சம்பவத்தால் நான் மிகவும் வருத்தமடைந்துள்ளேன், மேலும் இது குறித்து முறையான விசாரணை நடத்த பல குழுக்களுக்கு உத்தரவிட்டுள்ளேன். அந்த விசாரணைகள் முடிந்தவுடன் அது பற்றி உங்களுக்கு அறிவிக்கவும் எதிர்பார்க்கின்றேன்.

நீங்கள் கூறியது போல், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக் கூறவேண்டியுள்ளதுடன் தற்காலிக மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவதற்கான முறையான அணுகுமுறையை எங்கள் அரசாங்கம் தற்போது மேற்கொண்டுள்ளதால், பலன்களை பெற்றுக்கொள்ள எங்களுக்கு சிறிது கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். எதிர்காலத்திலும் உங்களின் ஆலோசனை மற்றும் அறிவுரைகளை மரியாதையுடன் எதிர்பார்க்கிறேன்.

தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், எமது நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நீங்கள் முன்மொழிந்தால், எனது முழு ஆதரவையும் வழங்குவேன் என்பதை நான் மரியாதையுடன் நினைவு கூர்கிறேன். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தற்போதைய நெருக்கடிக்கு 3 நாட்களில் தீர்வுகாண முடியும்

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள விசேட கடிதமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் பிரகாரம் தற்போதைய நெருக்கடிக்கு மூன்று நாட்களுக்குள் தீர்வு காண முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு தருணத்தில் அரசியல் தலைவர்கள் கட்சி பேதங்கள் இன்றி மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## வியாழேந்திரன் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

வீட்டுக்கு முன்னால் பொதுமக்ன் ஒருவர் மீது அமைச்சரின் மெய்பாது துப்பாக்கி சூடு நடாத்தியதில் மாகாலிங்கம் பாலசுந்தரம் உயிரிழந்ததுடன் மெய்பாதுகாவலர் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் படுகொலை செய்யப்பட்ட மாகாலிங்கம் பாலசுந்தரத்தின் 36 வது பிறந்த தினமான இன்று படுகொலை செய்யப்பட்டவரின் உறவினர்கள் அவரின் ஏற்பாட்டில் நினைவேந்த அமைச்சரின் வீட்டுக்கு முன்னாள் உள்ள கொழும்பு மட்டக்களப்பு பிரதான வீதியில் மட்டக்களப்பு வரவேற்கு கோபுரத்துக்கு முன்னால் இடம்பெற்றது

இதில் உயிரிழந்தவரின் உறவினர்கள், பெர்துமக்கள் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவான், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், முன்னால் அரசாங்க அதிபர் மா.உதயகுமார், கிழக்கு மாகாண பிரதிதவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, மற்றம் மாநகரசபை உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு உயிரிழந்தவரின் திரு உருவப்படத்திற்கு மலர்தூவி சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து அவரின் ஆத்மசாந்தி வேண்டி வீதிகளில் பிரயாணித்தவர்களுக்கு தாகசாந்தி வழங்கிவைத்த பின்னர் அவரின் படுகொலைக்கு நீதி வேண்டி கோஷம் எழுப்பியவாறு ஆர்பாட்டத்தில் சுமார் ஒருமணித்தியாலம் ஈடுபட்டு பின்னர் ஆர்ப்பாட்டகாரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்

இதேவேளை அமைச்சரின் வீட்டுக்கு முன்னால் கலகமடக்கும் பொலிசார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி செயலகத்திற்கு முன் சவப்பெட்டி

போராட்டம் முன்னெடுத்ததுடன், மலர் வளையம் ஒன்றையும் வைத்திருந்தனர்.

றம்புக்கணவில் இடம்பெற்ற அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தின் போது உயிரிழந்த சமிந்த லக்சானின் நினைவாகவே இதனை அவர்கள் மேற்கொண்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

## அரசுக்கு எதிராக ஜீவன் தொண்டமான்

அதன் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கக் கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் சுயேட்சை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டதாக அந்த டுவிட்டர் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹக்கீமின் இரட்டை வேடம்

அவ்வாறிருக்கையில் முறையான விசாரணைகள் எதுவுமின்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து என்னை திடீரென நீக்கிவிட்டதாகக் கூறி அவர் எவ்வாறு இந்த நாட்டைத் தவறாக வழிநடத்த முடியும்?

மேலும், தற்போது நமது அயல் நாடொன்றில் இலங்கையின் தூதுவராக இருக்கும் அவரது நண்பருடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதோ

அல்லது சமகி ஜன பலவேகயவின் அனுமதி இன்றியும் மேன்மைதங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியுடன் உறுதியான புரிந்துணர்வுக்கும் ரவூப் ஹக்கீம் வந்ததை அவரால் மறுக்க முடியுமா?

அதனை தொடர்ந்து, 2020 ஒக்டோபர் 18 ஆம் திகதி ரவூப் ஹக்கீம் அவர்களின் கார்னிவல் சொந்த (Carnival) அலுவலகத்தில் ஜனாதிபதியின் சகோதரர் திரு. பசில் ராஜபக்ச அவர்களுடன் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் சந்திப்பு நடத்தியதை அவர் மறுக்க முடியுமா? குறித்த சந்திப்பில் ரவூப் ஹக்கீம் அவர்களின் அழைப்பின் பேரில் நான் உட்பட எம்.சி.பைசால் காசிம், எச்.எம்.எம்.ஹரீஸ், தௌபீக் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் எங்கள் அனைவரையும் 20வது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறும் பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறும் எங்களை வேண்டிக் கொண்டதோடு, நான் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற விரும்பினாலும் சமகி ஜன பல வேகயவின் தலைமைத்துவம் மற்றும் அவரது கண்டி மாவட்ட தேர்தலில் சமகி ஜன பலவேகயவின் போட்டியிடுவதற்கான வாய்ப்பு என்பன காரணமாக அவரால் அவ்வாறு செய்ய முடியாமல் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவை, அத்தேர்தலில் அமோக வெற்றியுடன் பாராளுமன்றத்திற்கு அனுப்பியிருப்பதாலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள எனது வாக்காளர்களின் நலன் கருதியும், அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்துடன் இணைந்து வாக்காளர்களுக்கு அத்தியாவசியமான தேவைகளை பெற்றுக்கொடுக்க நான் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது அவசியமானதாலும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதனை உடன்படுகிறேன். அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட எமது அரசியல் கட்சியின் தலைமையின் வேண்டுகோளுக்கு இணங்க அவரை நம்பி 20வது திருத்தத்திற்கு வாக்களித்தேன். ஆனால் சமகி ஜன பலவேகயவின் அழுத்தத்தின் காரணமாக ரவூப் ஹக்கீம் வாக்களித்தமைக்காக எனது விளக்கத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் ரவூப் ஹக்கீம் தான், நான் பொது ஜன பெரமுனவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று அவர் கட்டாயாப்படுத்தியதற்கு ஏற்ப நான் செயற்பட்டதனை ரவூப் ஹக்கீம் நன்றாக அறிந்திருந்ததால் இவ்விடயம் தொடர்பாக ரவூப் ஹக்கீம் என்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

கடந்த ஆண்டு நவம்பர் 3, 2020 அன்று பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததற்காக என்னை SLMC யில் இருந்து நீக்கிவிட்டதாக இப்போது திடீரென்று ரவூப் ஹக்கீம் கூறுகிறார், குறித்த நீக்கமும் கூட ஜனாதிபதி என்னை நாட்டின் அவசர தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அவருக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியினை பெற்றுக் கொண்டதன் பின்னரே இக்குறித்த நீக்கம் ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அமைச்சரவையில் அங்கம் வகிக்குமாறு அழைத்ததன் பின்னர் தேசிய நலன் கருதி அதனை நான் ஏற்றுக்கொண்டேன்.

எந்த விசாரணையும் இன்றி என்னை உடனடியாக கட்சியினை விட்டும் நீக்கியதாக கூறப்படும் எந்தத் தகவலும் இதுவரை எனக்கு வரவில்லை, அவ்வாறு கிடைத்தால் அதற்குத் தகுந்த பதிலளிப்பேன்.

## இன்று சரித்திரம் காணாத மாபெரும்...

பதவியிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கான நேரம் வந்துவிட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டாலும் சிறையில் அடைக்கப்பட்டாலும் நாங்கள் ஆர்ப்பாட்டங்களை தொடர்வோம் என அவர்தெரிவித்துள்ளார்.




# அட்டைகள் எவ்வாறு மனிதனிலிருந்து இரத்தத்தினை உறுஞ்சுமோ அதுபோன்று நாட்டு மக்களின் இரத்தத்தினை அரசாங்கம் உறிஞ்சுகின்றது

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இந்த நாட்டில் அட்டைகள் எவ்வாறு மனிதனிலிருந்து இரத்தத்தினை உறுஞ்சுமோ அதுபோன்று நாட்டு மக்களை உறிஞ்சும் செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மட்டக்களப்பு பாலமீன்மடு, லைட்ஹவுஸ் இளைஞர் கழகத்தின் 26வது நிறைவினை முன்னிட்டு முகத்தூர் முழக்கம்மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை பாலமீன்மடு லைட்ஹவுஸ் விளையாட்டு மைதானத்தில் நடாத்தியது.

30 இளைஞர் கழகங்கள் பங்குகொண்ட இந்த சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் நாட்டில் அட்டைகள் எவ்வாறு இரத்தத்தினை உறிஞ்சி எடுக்குமோ அதே போன்று இந்த நாட்டு மக்களின் நிதியை களவெடுத்து, நாட்டு மக்களுக்கு சொந்தமான வளங்களை விற்பனை செய்து, இந்த நாட்டு மக்களுக்கு சொந்தமான அந்நிய செலாவாணியை கொண்டு நாடுகளின் கடனை செலுத்துவதாக கூறி தனது குடும்பத்தின் கடன்களை அடைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த நாட்டில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வரும்போது கையிருப்பாக இந்த நாட்டில் 06 பில்லியன் அமெரிக்க டொலர் இருந்துள்ளது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி வரப்போகின்றது, பொருட்களுக்கான தட்டுப்பாடு வரப்போகின்றது என்று தெரிந்தும் இந்த அந்நிய செலவாணியை பயன்படுத்தி அந்த கடனை அடைப்பதற்கான காரணம் அவரின் குடும்பத்தின் வேண்டப்பட்டவருக்கே அந்த நிதியை வழங்கியதான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றது.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒரு அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர், இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் கிடைத்துள்ளார்கள். நிதியே இல்லாத நாட்டுக்கு ஒரு அமைச்சர். சிங்கள அமைச்சர்களே இன்று



அமைச்சு வேண்டாம் என்று கூறுமளவிற்கு அரசிடம் நிதியில்லாத நிலை காணப்படுகின்றது. இந்த மிகவும் மோசமாக விமர்சிக்கப்படும் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ இருக்கின்றார். வெட்கம், சூடு, சொறனை இருக்கும் ஒரு ஜனாதிபதி மீண்டும் இந்த நாட்டில் ஜனாதிபதியாக இருக்கமுடியாது.

சிங்கள மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டவர்களே அமைச்சு பதவிகள் வேண்டாம் என கூறும்போது, எம்மவர்கள் எதற்காக அமைச்சு பதவிகளை எடுக்க வேண்டும்.

நான் நாடாளுமன்றத்தில் 5000 ரூபா பணத்தாளை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முன்காட்டி பேசியபோது நான் சுயாதீனமாக மக்களுக்காக செயற்படப்போவதாக கூறியவர் இருவாரங்கள் கழிவதற்குள் அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்டுள்ளார்.

அப்போது நான் 5000 ரூபாய் வழங்கியது சரிதான். அமைச்சுப்பதவியும் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களும் வழங்கியதாக கூறப்படுகின்றது.

இந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இலங்கையில் உள்ள மக்களை தங்களது தவறான வழிநடத்தல்களினால், தவறான தீர்மானங்களினால் இந்த நாட்டின் பொருளாதாரத்தினை அழித்து அடுத்தவேளைக்கு உணவில்லாத நிலையினை இந்த நாட்டு மக்களுக்கு இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. எனத் தெரிவித்துள்ளார்.

# தலவாக்கலை பிரதேசத்தில் அதிபர், ஆசிரியர்கள் சுகயீன போராட்டம்



(தலவாக்கலை பி.கேதீஸ்)

அனைத்து அதிபர் ஆசிரியர்களும் ஒன்றிணைந்து எரிபொருள் விலையேற்றம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் என்பவற்றைக் கண்டித்து சுகயீன போராட்டத்தில் நேற்று (25) திங்கட்கிழமை ஈடுப்பட்டனர்.

எரிபொருள் விலையேற்றத்தால் ஆசிரியர்கள்,அதிபர்கள் பாடசாலைக்கு செல்வதில் சிரமப்படுவதாகவும் இதனால் தூர இடங்களுக்கு சென்று பணிபுரியும் ஆசிரியர்களை அருகிலுள்ள பாடசாலைக்கு கடமையாற்றக் கூடிய செயற்பாடுகளை முன்னெடுக்;குமாறும்,தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளாவிய ரீதியில் பல்வேறு விதமான போராட்டங்களில் மக்கள் ஈடுப்பட்டு வருகின்றனர்.

இப்போராட்டங்களுக்கு வலுசேர்க்கும் வகையில் இந்த சுகயீன லீவு போராட்டம் அதிபர், ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்று (25) மலையக பாடசாலைகள் மூடிய நிலையில் காணப்பட்டதுடன், தலவாக்கலை பிரதேசத்தில் ஆசிரியர்கள் அஞ்சல் அலுவலகத்தில் சுகயீன தந்திகளை பாடசாலைக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுப்பட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. அதிபர், ஆசிரியர்களின் இந்த சுகயீன போராட்டம் தொடர்பாக அறிந்திருக்காத மாணவர்கள் பலர் பாடசாலைக்கு வருகை தந்து திரும்பி சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

நேற்றைய தின போராட்டத்திற்கு நுவரெலியா மாவட்டத்தில் அதிபர், ஆசிரியர்கள் 100 வீத ஒத்துழைப்பை வழங்கியுள்ளதாக ஆசிரிய தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

# பம்பலப்பிட்டி புனித சேன் போல் தேவாலயத்தில் இப்தார் நிகழ்வும், நினைவஞ்சலியும்









(சில்மியா யூசுப்)

இலங்கையில் ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பின் மூன்றாம் ஆண்டான ஏப்ரல் 21 நினைவு நாளை முன்னிட்டு வியாழக்கிழமை (21) பம்பலப்பிட்டி புனித சென் போல் தேவாலயத்தில் ஈஸ்டர் தாக்குதலினால் உயிரிழந்த 260 பேருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சிறப்பு வழிபாடு ஒன்று நடத்தப்பட்டது.

புனித ரமழான் மாதம் என்பதால், உயிரிழந்தவர்களின் நினைவாக அவர்களுக்காக நினைவஞ்சலியும், கிரிஸ்தவ இஸ்லாமிய உறவுகளுகளுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இப்தார் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன.

இந்நிகழ்வில் தேவாலய (பாதர்) பாதிரியாரான அன்ட்ரெவ் தேவதாசன் , சமூக செயற்பாட்டாளரான சீரின் சரூர் , ஸ்வஸ்திகா அருலிங்கம் மற்றும் நபீலா இக்பால் பெண்கள் அமைப்பின் உறுப்பினரான அனீஸா பிர்தவ்ஸ் மற்றும் சமூக ஆர்வலர்கள் ,பயங்கரவாத தடுப்புச்சட்ட காவலில் வைக்கப்பட்டு விடுதலையாகி வந்த அப்பாவி பெண்களும் இன்னும் தொடர்ச்சியாக 03 வருடகாலமாக எவ்வித விசாரணையும் இன்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்களின் உறவினர்களும் இதில் கலந்து கொண்டதோடு அவர்களின் அனுபவங்களும் இந்நிகழ்வின் போது பகிரப்பட்டன.

யுத்ததிற்கு பின்னர் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தினை பாவித்து அதிகளவில் நபர்களை கைது செய்யப்பட்டதும் ,பெரும்பாலான பெண்கள் தொடர்ச்சியாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சம்பவம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரானில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனைவருக்கும் விடுதலை



(க.ருத்திரன்)

மட்டக்களப்பு கிரான் நாகவத்தை கடற்கரை காணியொன்றில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை மேற்கொண்டதன் பொருட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்கள் அனைவரும் நேற்று (25) விடுதலை செய்யப்பட்டனர்.

குறித்த வழக்கு நேற்று (25) மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் வாழைச்சேனையில் நீதிபதி வி.கருணாகரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபரின் ஆலோசனையின் படி குறித்த வழக்கில் இருந்து சந்தேக நபர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு தீர்பளிக்கப்பட்டது.

இந்த வழக்குடன் சம்பந்தப்பட்ட எந்த நிபந்தனையின்படியும் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் வைக்கத் தேவையில்லையென்றும் இன்றுடன் இவ்வழக்கு கைவாங்கல் செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி எம்.எச்.எம்.றம்சீன் தெரிவித்தார்.

அத்துடன் இவ் வழக்கினை கல்குடா பொலிசரினால்; தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் மனுவின் அடிப்படையில் சட்டமா அதிபரின் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இவ் வழக்கிற்கு ஒத்துழைப்பு வழங்கிய p2p அமைப்பிற்கும் குருசுமத்து வி.லவக்குமாருக்கும் தமது நன்றியை தெரிவித்தார்.

இவ் வழக்கில் குருசுமுத்து விமலசேன வயது (68) என்பவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தமையினால் 10 பேரில் 9 பேரே ஆஜராயிருந்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 02 பெண்கள் உட்பட 10 பேர்கள் 18.5.2021 ஆம் திகதியன்று கல்குடா பொலிசாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.நீதி மன்றின் கட்டளைக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய 08.12.2021 ஆம் திகதியன்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் வாழைச்சேனையில் நீதிபதி எச்.எம்.எம்.பசில் முன்னிலையில் இவர்களது வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல நீதி மன்றம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் பொலிஸ் நிலையம் சென்று 9-12 மணிக்குள் கையொப்பமிடல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

நேற்று இவ் வழக்கில் சட்டத்தரணியான எம்.எச்.எம்.றம்சீன் ஆஜராயிருந்தார்.சட்டதரணிக்கு விடுதலை செய்யப்பட்டோர் தங்களது நன்றியை தெரிவிக்கும் முகமாக நீதிமன்ற முன் வாயிலில் வைத்து மலர்மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி தமது நன்றியை தெரிவித்துக்கொண்டனர்.

இவ் வழக்கினை பொத்துவில் தொடக்கம் பொலி கண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கம் முன்னெடுத்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# புதிய உறுப்பினராக றமிஸ் நியமனம்

( காரைதீவு நிருபர் சகா)

சம்மாந்துறை பிரதேச சபையின் ஸ்ரீ.ல.சு.கட்சி உறுப்பினர் வை.பி.எம். முஸம்மில் உறுப்பினர் பதவியில் இருந்து கட்சியால் நீக்கப்பட்டதை அடுத்து, அவ்விடத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கான அமைப்பாளரும் ,சம்மாந்துறை பிரதேசத்தின் பிரபல வர்த்தகருமான அப்துல் ஹமீட் அன்வர் (றமிஸ்) புதிய உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி செயலாளர் தயாசிறி ஜயசேகர நேற்று கட்சி தலைமையகத்தில் வைத்து வழங்கி வைத்தார்.

அச் சமயத்தில், சம்மாந்துறை பிரதேச சபையின் உப தவிசாளரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளருமான ஏ.அச்சிமொகமட், சபையின் முன்னாள் உப தவிசாளரும், கட்சியின் மாவட்ட அமைப்பாளருமான வெ.ஜெயச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# போதுமக்களின் ஜனநாயக ரீதியான போராட்டத்திற்கு அரச உத்தியோகத்தர்களும் உதவ வேண்டும்

(எப்.முபாரக் )

பொருட்களின் கண்மூடித்தனமான விலையேற்றம், வாழ்க்கைச் செலவு உயர்வு என்பவற்றைக் கண்டித்து பொதுமக்கள் முன்னெடுத்து வரும் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு சகல அரச உத்தியோகத்தர்களும் தமது ஒத்துழைப்புக்களை வழங்க முன்வர வேண்டுமென திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் சின்னாபின்னமாகியுள்ளது. கேட்பார் பார்ப்பற்ற நிலையில் பொருட்களின் விலை நாளாந்தம் உயர்த்தப் படுகின்றது. இதனால் மிகப் பெரும்பான்மையான மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.இதனால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் தமது எதிர்ப்புகளை இந்த அரசுக்கு நாளாந்தம் நாடு முழுவதும் ஜனநாயக ரீதியில் தெரிவித்து வருகின்றனர். இந்தப் பொருளாதார சீரழிவினால் அரச உத்தியோகத்தர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். தினமும் விலை உயர்கின்ற அளவுக்கு அவர்களது சம்பளம் உயரவில்லை. இதனால் பெரும்பாலான அரச உத்தியோகத்தர்கள் கடனுடனும், அரை வயிற்றுடனும் தற்போது தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர். கௌரவம் கருதி அரச உத்தியோகத்தர்களால் இதனை வெளியில் சொல்ல முடிவதில்லை.



இந்த விடயம் சொகுசு வாழ்க்கை வாழும், ஜனாதிபதிக்கும், அவரது குடும்பத்தினருக்கும், பதவி ஆசை கொண்டு அமைச்சுக்களை பொறுப்பெடுத்துள்ளோருக்கும் தெரியா விட்டாலும் எனக்குத் தெரியும். ஏனெனில் நானும் மக்களோடு மக்களாகவே இருக்கின்றேன். எனவே, பாதிக்கப்பட்டோர் என்ற வகையில் பொதுமக்கள் முன்னெடுத்து வரும் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு சகல அரச உத்தியோகத்தர்களும் ஜனநாயக ரீதியில் தமது ஒத்துழைப்புக்களை வழங்க முன்வர வேண்டும். இது குறித்து தொழிற்சங்கங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆசிரிய தொழிற்சங்கங்கள் இந்த விடயம் குறித்து தீர்மானித்து பொது மக்களின் போராட்டங்களுக்கு தமது ஒத்துழைப்புகளை வழங்க முன்வந்துள்ளனர். இதனை நான் வரவேற்கின்றேன். இதே போல ஏனைய சகல அரச உத்தியோகத்தர்களும் தமது ஒத்துழைப்புக்களை வழங்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

# அம்மனின் வெளி வீதி உலா



(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய மண்டலாபிசேக பூஜையின் போது தற்சமயம் வெளிவீதி உலா இடம்பெற்று வருகிறது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் தலைமையில் தினமும்இரவு நேரப்பூஜைகள் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

அவ்வாலயத்தின் மகாகும்பாபிசேகம் கடந்த 6ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றுமுடிந்து மண்டலாபிசேகப்பூஜைகள் நடைபெற்றுவரும் இந்நாட்களில் பக்தர்கள் அதிகளவில் அங்கு செல்லஆரம்பித்துள்ளனர். நேற்று 18வது தினபூஜை. ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு வருகைதந்திருந்தார்கள்.

மண்டலாபிசேகபூஜைகள் யாவும் எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி நிறைவுற்று 6ஆம் திகதி சங்காபிஷேகத்துடன் கும்பாபிஷேக விழா நிறைவடையவிருக்கிறது என ஆலய அறங்காவலர்சபைத்தலைவர் கி.ஜெயசிறில் தெரிவித்தார்.

பக்தர்கள் அனைவரும் அன்னதானத்திலும் பூஜையிலும் பங்கேற்று மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர்.

தினமும் இரவு 9 மணிவரை பூஜை இடம்பெற்றுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# முப்படை, போலிஸார் இணைந்து விசேட அதிரடிப்படையினர் வீதி ரோந்து நடவடிக்கை



(பாறுக் ஷிஹான்)

முப்படை மற்றும் பொலிஸார் இணைந்து விசேட அதிரடிப்படையினர் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் பரிசோதனை செயற்பாட்டினையும் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுத்துள்ளனர்.

இதற்கமைய திங்கட்கிழமை (25)அம்பாறை மாவட்டத்தில் மருதமுனை பெரிய நீலாவணை கல்முனை சம்மாந்துறை சவளக்கடை மத்திய முகாம் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு ரோந்து நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துள்ள குற்றச்செயல்களை கட்டுப்படுத்த இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஒரு கட்டமாக திடீர் சோதனைகளை விசேட அதிரடிப்பழ்யினர் முப்படையினர் உள்ளிட்ட பொலிஸார் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

இத் திடீர் சோதனையில் சந்தேகத்திற்கிடமானவர்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு ஆலோசனைகள் இஎச்சரிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுச்சூழல் அதிகாரி, போலிசார் கலந்து கோள்ளாமை கவலைக்குரியது

## கூட்டத்தில் தவிசாளர் ஜெயசிறில் சுட்டிக்காட்டினார்



( காரைதீவு நிருபர் சகா)

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் நேற்று (25) திங்கட்கிழமை காரைதீவு பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம் பெற்றது.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளைஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரி, கடல் சார் திணைக்கள அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச செயலக கரையோரப்பாதுகாப்பு உத்தியோகத்தர், பிரதேச சபை செயலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், விடயத்திற்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர், வேலைமேற்பார்வையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் கரையோரச் சுத்தம் சம்பந்தமாக பல விடயங்கள், சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் தொடர்பாக தவிசாளரினால் பேசப்பட்டது.

இக் கலந்துரையாடலில் முக்கியமாக கலந்து கொள்ள வேண்டிய சுற்றுச்சூழல் திணைக்களம் மற்றும் பொலீஸ் திணைக்களம் என்பன அழைப்பு விடுக்கப்பட்டிருந்தும் கலந்து கொள்ள வில்லை .

அதனால் பல விடயங்களை செயற்படுத்த முடியாமல் போனதாகவும் அனைத்து துறைசார்ந்த அதிகாரிகளும் இவ்விடயங்கள் தொடர்பாக அக்கறையுடன் செயற்பட்டு சுற்றுச் சூழலையும் இயற்கை வளங்கள்களை பாதுகாத்து வளமான காரைதீவு பிரதேசத்தை உருவாக்க அர்பணிப்புடன் செயற்பட வேண்டுமென தவிசாளரினால் சுட்டிக்காட்டப்பட்டது.

# நிலையான சமாதானத்தை கட்டியேழுப்புதல் தோடர்பான சேயலமர்வு!!



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கையில் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புதல், அந்த சமாதானத்தை அடைவதற்கான சவால்கள், நிலையான சமாதானத்திற்கான மும்மொழிவுகள் தொடர்பான செயலமர்வொன்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் நிறுவன இயக்குனர் அருட்பணி ஏ.ஜேசுதாசன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற ஒருநாள் செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல் சமய உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் பல நல்லிணக்க சமூக செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் இலங்கையில் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புதல், அந்த சமாதானத்தை அடைவதற்கான சவால்கள், நிலையான சமாதானத்திற்கான மும்மொழிவுகள் இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான புரிந்துணர்வுகளை எவ்வாறு புரிந்து கொள்ள வைத்தல் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஒருநாள் செயலமர்வே இவ்வாரு முன்னெடுக்கப்பட்டது.

குறித்த செயலமர்விற்கு வளவாளர்களாக கிழக்குப்பல் கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்பணி நவரெட்ணம் நவாஜீ அடிகளார், காத்தான்குடி பிஸ்மி கல்வி நிறுவன தவிசாளர் எம்.பி.எம் .பிர்தொவஸ் நளினி ஆகியோர்கலந்துகொண்டு சிறந்த முறையில் வளவாண்மையாற்றியிருந்தனர்.

இதன்போது செயலமர்வில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மற்றும் பேண் தலைமைத்துவத்தை கோண்ட குடும்பங்களுக்கான உலர் உணவுப் போதிகள்









(வாஸ் கூஞ்ஞ)

தற்பொழுது நாட்டில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடி காரணமாக மெசிடோ என அழைக்கப்படும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் வட பகுதிகளின் பல பாகங்களுக்கும் சென்று இனம் காணப்பட்டு வரும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு பிரதேச செயலாளர் கிராம சேவையாளர்கள் சமூக பணியாளர்களுடன் இணைந்து உலர் உணவுப் பொருட்கள் கொண்ட பொதிகள் வழங்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைய மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் திரு ஜாட்சன் பிகிராடோ அவர்களின் தலைமையில் யாழ் தீவகப் பகுதிகளில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மற்றும் பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் சனிக்கிழமை (23.04.2022) வழங்கிவைக்கப்பட்டது

தீவு பகுதியில் உள்ள பிரதேச செயலாளர் கிராம சேவையாளர்கள் சமூக பணியாளர்களுடன் இணைந்து அல்லைப்பிட்டி மண்டைதீவு புங்குடுதீவு வேலணை சரவணை நைனா தீவு ஊர்காவற்றுறை நெடுந்தீவு போன்ற பகுதிகளுக்கு அங்குள்ள கிராமசேவையாளர்களால் தெரிவுசெய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கான 3350 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டது

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற உணவு தட்டுப்பாடு உணவுப் பொருட்களுக்கான விலை ஏற்றம் காரணமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மற்றும் பெண் தலைமைத்துவங்களை கொண்ட குடும்பங்கள் பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள்

இதனை கருத்தில் கொண்டு மன்னார் வவுனியா முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களுக்கான நிவாரண பணிகள் நடைபெற்றுக் கொண்டு வரும் இதே நேரத்தில் தீவக மக்களின் நலனை கருத்தில் கொண்டும் இந்த நிவாரண பணிகள் வழங்கி வைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்களும் குறித்த பகுதிகளில் கிராமசேவையாளர்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு வருவதும் குறி;ப்பிடத்தக்கதாகும்.

# கல்வி சாதனையாளர்கள் கேளரவிப்பு



( காரைதீவு நிருபர் சகா)

24வது மாபெரும் கலாசார விளையாட்டு விழா 2022 சுபகிருது சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 39வது ஆண்டு நிறைவை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமூக நிலையமும் காரைதீவு பிரதேச செயலகம் மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் இணை அனுசரணையுடன் நடாத்திய 24வது மாபெரும் கலாசார விளையாட்டு விழாவில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு மிக சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது உயர்தர பரிட்சையில் வைத்திய துறைக்கும் பொறியில் துறைக்கும் தெரிவானவர்களுக்கும் கலைத்துறையில் 3ஏ சித்தி பெற்றவர்களுக்கும் சாதாரண தரப்பரிட்சையில் 9ஏ சித்திபெற்ற மாணவர்களும் காரைதீவு விளையாட்டு கழகத்தினரால் பகிரங்கமாக மைதானத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் இவ் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் அதிதிகள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# பாரம்பரிய முத்திரையை எங்களுக்கு குத்த வேண்டாம்

## இரத்தினபுரியில் வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு




அவர்களும் ஒன்றே இவர்களும் ஒன்றே என்ற கருத்து ஐக்கிய மக்கள் சக்திக்கு பொருந்தாது எனவும்,பாரம்பரிய எதிர்க்கட்சியின் வகிபாகத்திற்கு பதிலாக ஒரு நவீன அரசியல் செயற்பாட்டின் வகிபங்கை ஐக்கிய மக்கள் சக்தியால் மேற்கொள்ளப்படுவதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

225 பேரும் வீட்டிற்கு செல்ல வேண்டும் என சிலர் கூறினாலும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரையும் குறித்த அந்த அபிப்பிராய கருத்தானது சரியானதல்ல எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

50 கட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஓர் மூச்சுத்திட்டத்திலிருந்து மருத்துவமனைகளுக்கு அத்தியாவசிய உபகரணங்களை வழங்குவதற்கு எதிர்க்கட்சியாக செயற்பட்டதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், சிலர் இந்த நற்செயலைக் கூட 'பயனற்றதாகக் கருதுவதாகவும் 'என்றும் தெரிவித்தார்.

நாடு கட்டியெழுப்பட வேண்டியது தரவு மற்றும் அறிவியல் காரணங்களின் அடிப்படையில் அமைந்த தெளிவான திட்டத்துடனயே என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அந்த வேலைத்திட்டம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவின் பிரகாரம் செயற்படுத்தப்படும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஓர் மூச்சுதிட்டத்திற்கு இணைவாக ஆரோக்கியமான நாட்டை உருவாக்கும் நோக்கில் 'ஜன சுவய' திட்டத்தின் கீழ் சத்காரய திட்டத்தின் 50 ஆவது கட்டமாக, அறுபத்தொன்பது இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா

(ரூ.6,950,000) பெறுமதியான அத்தியாவசிய வைத்தியசாலை உபகரணங்கள் நேற்று(23) இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு நன்கொடையாக வைக்கப்பட்டன.

இதன் பிரகாரம்,ரூபா 6,950,000 பெறுமதியான ICU Ventilator இயந்திரம் ஒன்றே இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரால் வழங்கி வைக்கப்பட்டன.

கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் 'ஜன சுவய' கருத்திட்டத்தில் இணைந்து கொண்டு 'எதிர்க்கட்சியின் மூச்சு' நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர்.

இது வரை 49 கட்டங்களில் 1316 இலட்சம் (131,650,900) ரூபா பெறுமதிவாய்ந்த மருத்துவமனை உபகரணங்கள் ஐக்கிய மக்கள் சக்தியால் வழங்கப்பட்டுள்ளன.

# பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயத்தில் இடம்பெற்ற தொலைக்கல்வி நிலைய திறப்பு விழா!!




மட்டக்களப்பு மேற்கு கல்வி வலையத்தின் பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயத்தின் தொலைக்கல்வி நிலைய திறப்பு விழா 22ம் திகதி வெள்ளிக்கிழமை வெகுவிமர்சையாக இடம்பெற்றிருந்தது.

பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயத்தின் அதிபர் வீ.புஸ்பா கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், குறித்த தொலைக்கல்வி நிலையத்தினையும் திறந்துவைத்துள்ளார்.

குறித்த பாடசாலையில் மாணவர்களுக்கான நீண்டகால தேவையாக இருந்து வந்த தொலைக் கல்வி நிலையத்தின் தேவையை உணர்ந்து கொண்ட AU Lanka நிறுவனமானது Child fund நிறுவனத்தின் நிதி அனுசரனையுடன் குறித்த தொலைக்கல்வி நிலையத்தினை ஏற்பாடு செய்து மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக ஆரம்பித்துவைத்துள்ளனர்.

இந் நிகழ்விற்கு விசேட அதிதிகளாக மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரன், உதவி பிரதேச செயலாளர் திருமதி.சுபா சதாகரன், மண்முனை மேற்கு கல்விப்பணிப்பாளர் செல்வி. அகிலா கணகசூரியம், AU Lanka நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப்பணிப்பாளர் ஆர்.தவசீலன், AU Lanka நிறுவனத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான கே.சதீஸ்குமார் கலந்துகொண்ட நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகள் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்வின் போது AU Lanka நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'மரம் வளர்ப்போம் உயிர்காப்போம்' எனும் தொனிப்பொருளில் பயன்தரும் 550 இலுப்பை மரக்கன்றுகளை நடும் நிகழ்வின் அங்குரார்ப்பண நிகழ்வானது குறித்த பாடசாலையில் வளாகத்தில் அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிதிகளினால் மரக்கன்றுகள் நடப்பட்டு குறித்த திட்டம் அங்குரார்ப்பனம் செய்துவைக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஊடாக குறித்த பாடசாலையில் இருந்து 150 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், இதன்போது நடப்பட்ட ஒவ்வொரு மரத்திற்கும் ஒரு மாணவரை பெறுப்பானவராக நியமித்து குறித்த மரத்திற்கு அந்த மாணவரின் பெயரை சூட்டியதுடன், 150 மாணவர்களுக்கும் வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டு அவர்களுக்கான ஊக்குவிப்பு உதவித்தொகையும் வைப்பிலிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த அத ஃச்சணடுச் நிறுவனமானது கடந்த 12 வருடங்களாக தமது சேவையினை மண்முனை மேற்குப் பிரதேச செயலக பிரிவில் திறப்பட ஆற்றிவருவதுடன், இப்பகுதி மக்களின் கல்வி, கலாசாரம் மற்றும் பொருளாதார போன்ற விடயங்களை மேம்படுத்துவதற்காக திறம்பட செயற்பட்டு வரும் நிலையிலேலே 400 இற்கு மேற்பட்ட மாணவர்களை கொண்ட குறித்த பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் தேவையினை உணர்ந்ததன் அடிப்படையிலேயே குறித்த தொலைக் கல்வி நிலையத்தினை ஆரம்பித்து வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாவிதன்வெளியில் சுய தொழில் உபகரணங்கள் வழங்கி வைப்பு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (25) பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

விதாதா வள நிலையத்தின் 'கிராமத்திற்கு ஒரு பயனாளி' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் பதினொரு இலட்சம் ரூபா செலவில் 20 கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 18 பயனாளிகளுக்கு இந்த வாழ்வாதார ஊக்குவிப்பு சுயதொழில் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன. பிரதேச செயலகத்தின் கணக்காளர் றிஸ்வியஹ்சர், விதாதா வள நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.மபாஸ், வெளிக்கள இணைப்பாளர் கே. நவநீதன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு பயணிகளுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு இயந்திரங்களை வழங்கி வைத்தனர்.

# மோரவேவா வைத்தியசாலையில் சர்வமத வழிபாட்டுத்தலங்கள்






(ஹஸ்பர்)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கூற்றுப்படி, மனிதனின் ஆரோக்கியம் என்பது நோய் நிலைமையற்ற தன்மை மட்டுமின்றி, முழுமையான உடல், மன, சமூக மற்றும் ஆன்மீக நல்வாழ்வின் நிலை என்பதாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு தமது நோயாளர்களின் மனித ஆரோக்கியத்தின் ஒரு அங்கமான மத நம்பிக்கைகளுக்கும் மற்றும் ஆன்மீக விழுமியங்களுக்கும் மதிப்பளித்து, மொரவெவா ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தின் ஊழியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் சங்கத்தினர் உள்ளூர் சமூகத்துடன் இணைந்து சனிக்கிழமை (23/04/2022) மருத்துவமனை வளாகத்தில் நான்கு மதத்தினருக்குமான சர்வ மத வழிபாட்டுத்தலங்களை அங்குரார்ப்பணம் செய்தனர்.

இந்நிகழ்வானது மொரவெவா வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி லக்மாலி ஆனந்த அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. மொரவெவா ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையமானது திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் காரியாலயத்தில் நிர்வாகத்திற்குள் செயல்படும் ஒரு வைத்தியசாலையாகும்.

இவ்வங்குரார்ப்பண நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள், வைத்தியசாலை நலன் விரும்பிகள் சங்க உறுப்பினர்கள், மொறவெவ பிரதேச சபையின் தவிசாளர் - திரு. ஜெகத் வீரகொட, மொறவெவ அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள், அயல் வைத்தியசாலைகளின் ஊழியர்கள், சமூக சங்கங்களின் பிரதிநிதிகள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இந்த செயற்திட்டமானது இவ்வைத்தியசாலையின் முன்னாள் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் ஞானகுணாளன் போல் ரொஷான் அவர்களின் வழிகாட்டலின் கீழ் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் வைத்தியசாலை நலன் விரும்பிகள் சங்கத்தினூடாக ஆரம்பிக்கப்பட்டது. இந்த சர்வ மத வழிபாட்டுத் தலங்களுக்கான பங்களிப்பு முற்று முழுதாக வைத்தியசாலை சமூகம், நலன் விரும்பிகள் மற்றும் ஊழியர்களினால் பொறுப்பேற்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான சர்வ மத வழிபாட்டுத்தலங்கள் மொரவெவா போன்ற ஒரு சிறிய கிராமிய வைத்தியசாலையில் நிறுவப்பட்டது வரலாற்றில் காண்பதற்கரிய விடயமாகும். மொரவெவா வைத்தியசாலையின் இந்த சர்வ மத வழிபாட்டுத் தலங்கள் உள்ளூர் மக்களின் மத நல்லிணக்கத்தை மேலும் வலுப்படுத்தும் ஒரு முயற்சியுமாகும்.





# போராட்டத்தை ஆதரிக்க தமிழர்களுக்கு யாரும் சொல்லித் தரத்தேவையில்லை

## சிவசக்தி ஆனந்தன்

போராட்டம் ஒன்றை எப்படி எந்தச் சந்தர்ப்பத்தில் ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பாகத் தமிழ் மக்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க தேவையில்லை என முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின் போது தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

**கேள்வி-தற்கால அரசியல் நிலைமை தொடர்பாக உங்களின் நிலைப்பாடு என்ன?**

பதில்-கோட்டாபய ராஜபக்ச 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது சிங்கள மக்களிடம் இருந்த எதிர்பார்ப்பு அடுத்த ஒரு ஆண்டுகளிலேயே குறைவடைய ஆரம்பித்துள்ளது. அதேபோன்று கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் பசில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராகவும் நிதியமைச்சராகவும் பதவியேற்றபோது, அரசாங்கத்தின் செல்வாக்கு உயருவது போன்றதொரு தோற்றப்பாடு தெரிந்தது.

ஆனால் அடுத்த சில மாதங்களிலேயே அரசாங்கத்தின் செல்வாக்குக் குறைய ஆரம்பித்ததுடன் சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி அரசாங்கத்துக்குள் முரண்பாடுகளும் மேலோங்கியது. 69 இலட்சம் சிங்கள மக்களுடைய வாக்குகளில் கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தார். இவருடைய ஆட்சி நீடித்து நிலைக்க வாய்ப்பில்லை என்பது முற்போக்கான சிங்கள மக்களுக்கு ஏலவே தெரிந்த ஒன்று. தமிழ் மக்களுக்கும் அது ஏலவே தெரிந்ததுதான்.

கோட்டாபயவுக்கு வாக்களித்த மக்கள்தான் இன்று அவரை வீட்டுக்குப் போ என்று குரல் எழுப்புகின்றனர். மக்கள் வீதிக்கு வரும் நிலைமை உருவாகுமென அரசியல் தெரிந்த பலரும் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரே எதிர்பார்த்திருந்த ஒன்றுதான். ஆகவே ஊழல் மோசடி, அதிகாரத் துஸ்பிரயோகம் மாத்திரமல்ல பொருளாதார நெருக்கடிக்கான மூலத்தை இனிமேலாவது சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில் கோட்டாபய மாத்திரமல்ல சிங்கள அரசியல்வாதிகள் பலரிடமும் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகள் உண்டு. ஆகவே இனரீதியாக வகுக்கப்பட்டு வரும் பொருளாதாரத் திட்டங்கள் பொருளாதார நெருக்கடிக்கு உரிய காரணம் என்பதை உணர வேண்டும்.

**கேள்வி- அரசாங்கத்திற்கெதிரான சிங்கள மக்களின் போராட்டம் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு?**

பதில்-பொருளாதார நெருக்கடி. விலைவாசி உயர்வுக்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டம் நியாயமானது. அந்தப் போராட்டத்தைத் தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள். ஏனெனில் முப்பது ஆண்டுகால போரும் அதன் பின்னரான 12 வருடங்களில் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் எதிர்கொண்ட இன்னல்கள் துயரங்கள் என்பது மிகப் பெரியது.

ஆகவே போராட்டம் ஒன்றை எப்படி எந்தச் சந்தர்ப்பத்தில் ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பாகத் தமிழ் மக்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பதில்லை. ஆனால் கோட்டாபயவுக்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டத்தில் தமிழ் மக்கள் நேரடியாக ஆதரவு கொடுக்க வேண்டுமென யாருமே எதிர்ப்பார்க்கக்கூடாது.



ஏனெனில் டீசல், காஸ்,பெற்றோல் விலைகள் குறைவடைந்து அவை வழமைபோன்று இலகுவாகக் கிடைத்துவிட்டால், அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் குறைவடைந்து நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டால், தற்போது வீதியில் நின்று போராடும் சிங்கள மக்கள் வீட்டுக்குச் சென்றுவிடுவார்கள். சிங்களவர்களுடைய பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும்.

ஆகவே கோட்டாபய ராஜபக்சவை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமெனக் கோசமிட்டுப் போராடும் சிங்கள மக்கள் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை முதலில் நன்கு அறிந்திருக்க வேண்டும். தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டம் எழுபது ஆண்டுகளுக்கும் மேலானது.

**கேள்வி- தமிழ் தரப்புகளின் மௌனம், அரசாங்கத்திற்கு ஆதரவானதா?**

பதில்-தமிழர்கள் மௌனமாக இருக்கவில்லை. பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுகளினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் கோட்டாவை வீட்டுக்குப் போ என்று கோசமிடும் சிங்கள மக்கள், பொருளாதார நெருக்கடிக்கான மூல காரணத்தை அறிய விரும்புகின்றார்களா? கோட்டாபயவின் அதிகாரத் துஸ்பிரயோகம், ஊழல்மோசடி மாத்திரமே விலைவாசி உயர்வுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் காரணமல்ல.

இனரீதியாக வகுக்கப்பட்ட அரசியல் பொருளாதாரத் திட்டங்கள் தற்போதைய நெருக்கடிக்குக் காரணம். இதனை வீதியில் நின்று போராடும் சிங்கள மக்கள் துணிவோடு வெளிப்படுத்த வேண்டும்?

முப்பது ஆண்டுகால போருக்குச் செலவிட்ட தொகை பற்றி எந்தவொரு அரசியல் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் விளக்கம் கோரவில்லை. 2009 இற்குப் பின்னரான சூழலில் வடக்குக் கிழக்கில் இராணுவ முகாம்கள் நவீனமயப்படுத்தும் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டமை சிங்களக் குடியேற்றங்கள். புத்தர் விகாரை அமைக்கப்பட்டமை புத்தர் சிலைகள் வைக்கப்படுகின்றமை போன்ற இனரீதியான திட்டங்களுக்குரிய நிதி எங்கிருந்து பெறப்பட்டன? இது பற்றி ஜே.வி.பிகூட நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பவேயில்லை.

ஆகவே கோட்டாவுக்கு எதிரான போராட்டத்தில் தமிழ் மக்கள் மௌனமாக இருப்பதாக யாருமே கூற முடியாது. தமிழ் மக்களுக்கு வலிகள் ஏராளம்.

**கேள்வி- விமர்சனத்திற்குள்ளான சுமந்திரனின் தீப்பந்தப் போராட்டம் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு?**

பதில்-சுமந்திரன் எப்போதுமே தென்பகுதி அரசியலோடு ஒத்துப்போகக்கூடிய நிலைப்பாட்டை எடுத்து வரும் ஒருவர். ஆனாலும் சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் நடத்திய போராட்டத்தைக் கொச்சைப்படுத்த முடியாது. அவர் தனது கட்சி சார்ந்து தீப்பந்தப் போராட்டத்தை நடத்திச் சிங்கள மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்தப் போராட்டத்தின்போது வடக்குக் கிழக்கு மக்களின் அரசியல். பொருளாதார நியாயப்பாடுகளை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

குறிப்பாகச் சிங்கள மக்கள் தற்போது எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகள், விலைவாசி உயர்வுகள் தமிழ் மக்களுக்குப் போர்க்காலத்தில் பரீட்சயமானவை என்று கூறியிருக்க வேண்டும். 1999களில் ஒரு லீற்றர் பெற்றோல் ஆயிரத்து 500 ரூபாவுக்கும் அதற்குக் கூடுதலான விலைகளுக்கும் வடக்குக் கிழக்கில் விற்பனை செய்யப்பட்டன.

2014 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தில் எரிபொருட்களின் விலைகள் கொழும்பு விலையைவிடக் கூடுதலாகவே விற்பனை செய்யப்பட்டன. ஆகவே இந்த நிலைமைகள் பற்றி எடுத்துக் கூறியிருக்க வேண்டும்.



**கேள்வி- மக்களிடம் ஆட்சியை ஒப்படைக்க கோரும் சிங்கள மக்களின் கோரிக்கை நியாயமானதா?**

பதில்-இது நல்ல கேள்வி ஆட்சியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோர மக்களுக்கு முழு உரிமையும் உண்டு. ஏனெனில் இலங்கை அரசு என்ற கட்டமைப்பு மக்களினாலேயே தோற்றுவிக்கப்பட்டது. ஆகவே ஆட்சியை தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென மக்கள் கோருவதன் அர்த்தம் என்னவென்றால், இலங்கையின் தற்போதைய அரச கட்டமைப்பை மாற்ற வேண்டும் என்பதே.

ஆகவே தமிழ் முஸ்லிம் மக்களும் ஆட்சி அதிகாரத்தில் பங்கெடுப்பதற்குரிய புதிய அரச கட்டமைப்பை உருவாக்க சிங்கள மக்கள் ஒன்றுபட்டால், தமிழ் மக்கள் நிச்சயமாக முழுமையான ஆதரவு கொடுப்பார்கள்.

தமிழர்களின் அதிகாரப் பங்கீட்டுக்கான கோரிக்கை இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே தோன்றியது. அதற்காக முப்பது வருட அகிம்சைப் போராட்டமும் அடுத்த முப்பது வருட ஆயுதப் போராட்டமும் நடத்தப்பட்டது. ஆனால் புவிசார் அரசியல் போட்டிக்குள் ஈழவிடுதலைப் போராட்டமும் இல்லாதொழிக்கப்பட்டது.

தற்போது கோட்டா வீட்டுக்குப் போ என்று போராடும் சிங்கள மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு இனரீதியான அரசியல், பொருளாதாரத் திட்டங்கள் தான் மூல காரணம் என்பதை உணர்ந்து, இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பின் அதிகாரமுறைமைகளை மாற்ற முற்பட்டால் நிச்சயமாக இலங்கைத்தீவில் அரசியல் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படும்.

**கேள்வி- தமிழ் மக்கள் எந்த ஆர்வமுமின்றி இருக்கின்றார்கள்,அது அரசாங்கத்திற்கு ஆதரவானதா?**

அரசாங்கத்திற்கு ஆதரவு என்பதல்ல. தமிழ் மக்களைப் பொறுத்தவரை கொழும்பில் எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும், ஒன்றுதான். காஸ். டீசல் கிடைத்துவிட்டால் சிங்கள மக்கள் போராட்டத்தை நிறுத்திவிடுவார்கள். ஆனால் தமிழர்களின் போராட்டம் தொடர்ச்சியானது. சிங்கள மக்கள் உண்மையைத் தெரிந்து கொண்டு முழுமையான அதிகாரப் பங்கீட்டு மாற்றத்துக்கு ஒன்றுதிரள வேண்டும்.

சிங்கள அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் மாறி மாறி ஆட்சியமைத்தபோது போரைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தன. அதற்காகச் சிங்கள மக்களுக்கு இனவாத கருத்துக்களையும் தேர்தல் காலங்களில் விதைத்தார்கள். அது பிழையான பாதை என்பதைத்தான் தற்போதைய பொருளாதார நெருக்கடியும், விலைவாசி உயர்வும் சிங்கள மக்களுக்கு உணர்த்தி நிற்க்கின்றன.

**கேள்வி- அரசு மற்றும் அமைச்சரவை மாற்றம் தொடர்பில் தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு?**

பதில்-நிலையான அரசியல் தீர்வு முன்வைக்கப்படாதவரை தமிழ் மக்கள் எந்தவொரு அரசாங்கத்தையும் அதன் அமைச்சரவைடியும் ஏற்க மாட்டார்கள். வெறுமனே அரசியல் நோக்கிலான அபிவிருத்தி வேலைத் திட்டங்களே வடக்குக் கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ் மக்களுக்கு எது சரி எது பிழையென எல்லாமே விளங்குகின்றது. ராஜபக்சவின் அரசாங்கம் இனவாதத்தை மூலதனமாக்கிப் பிழையான வழியில் ஆட்சி அமைத்துள்ளது என்பதைத் தற்போதுதான் சிங்கள மக்களும் உணருகின்றனர்.

ஆகவே தற்போதைய நெருக்கடியான சூழலில், தமது அதிகாரத்தைத் தொடந்தும் தக்கவைப்பதற்காகச் செய்யப்பட்டுள்ள அமைச்சரவை மாற்றத்தால் ஒட்டுமொத்த இலங்கைத்தீவுக்கே பயனில்லை என்றார்.

# கலை மன்றங்களுக்கான வருடாந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கிவைப்பு





(நூருல் ஹுதா உமர்)

கலை மன்றங்களுக்கான வருடாந்த ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவானது, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஒவ்வொரு வருடமும் கலை மன்றங்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் வழங்கப்படும் தேசிய நிகழ்ச்சித்திட்டமாகும்.

நலிவுற்ற நிலையில் இருக்கின்ற கலைஞர்களைப் பேணிக் காத்தல், போசணையளித்தல், பொருளாதார ஆற்றலை வளர்த்தல், அவர்களை கௌரவப்படுத்தல் தேசத்தின் கடமையும் அரசாங்கத்தின் பொறுப்புமாகும்.

அந்தவகையில் இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் இயங்கிவரும் அய்மன் கலை மன்றம், சன்ரைஸ் கலை மன்றம், இஸ்லாமிய மரபுரிமைகள் கலாச்சார மன்றம், மீரா கோலாட்டக் குழு ஆகிய கலை மன்றங்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.




# விடுகை விழாவுடன் கூடிய வித்தியாரம்ப விழா





( காரைதீவு நிருபர் சகா)

அன்னமலை ஶ்ரீ சக்தி வித்தியாலயத்தில் கல்வி பயின்று தரம் 6 க்கு செல்லும் மாணவர்களுக்கான விடுகை விழாவும்,

தரம் 01 மாணவர்களிற்கான வரவேற்பு விழாவும் நேற்று அதிபர் பொன்.பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றது .

இந்நிகழ்வில் சம்மாந்துறை வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். பாடசாலையின் இணைப்பாளர் எஸ்.குணரெட்ண, அன்னமலை சமுக செயற்பாட்டாளர்தா.சிவகுமார் ,அன்னமலை வடபத்ரகாளி அம்மன் ஆலய தலைவர் எஸ்.சுரேந்திரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்விற்கான முதலாந்தர மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நினைவுச்சின்னம் கற்றல் உபகரணமடங்கிய பக்கற் மாலை போன்ற சகல பொருட்களையும் புரவலர் சிவகுமார் தம்பதியர் வழங்கி வைத்தனர்.

விடுகை பெற்று செல்லும் மாணவர்களுக்கான கற்றலுபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# பொதுஜனப் பெரமுன அரசாங்கமும் நாட்டின் பொருளாதார நெருக்கடியும்

## தற்போதைய அரசாங்கத்தின் தவறுகளும் தீர்ப்பதற்கான வழியும்

ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ச 2019 நவம்பரில் தெரிவு செய்யப்பட்டார்.2020 ஆகஸ்ட் மாதத் தேர்தலில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் பொதுஜனப் பெரமுன பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்றது. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவடைந்து தேர்தலைச் சந்தித்தமை,ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பொதுஜனப்பெரமுனவுடன் ஒட்டிக் கொண்டமை,தேர்தல் தில்லுமுல்லுக்கள் எனபன அமோகவெற்றியை இலகுபடுத்தியது.அதன் பின்னர் ஜனாதிபதியான கோத்தபாய அவர்கள் தனது அதிரடியான முடிவுகளை மேற்கொண்டார்.

முதலாவது செயற்பாடாக பொருளாதாரம் சார்ந்த விடயத்தில் கைவைத்தார்.ஏற்கனவே கொரோனாத் தாக்கம் காரணமாக பொருளாதார சரிவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் ஜனாதிபதியின் செயற்பாடுகள் பொருளாதாரத்தை அதிகளவில் பாதித்தது. அந்த வகையில் மொத்தத் தேசிய உற்பத்தியில் 50 வீதமான வருமானத்தைத் தமதாக்கும் 20 வீதமான செல்வந்தர் வர்க்கத்தின் வருமான வரிகளைக் கணிசமாகக் குறைத்துவிட்டார்.அந்த வகையில் அரசுக்குக் கிடைத்த 67 வீதமான வரிவருமானம் இந்த செயற்பாட்டால் இழக்கப்பட்டது.அதாவது 600 பில்லியன் ரூபாய்கள் அதாவது அறுபதாயிரம் கோடி ரூபாய்கள் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டது. அடுத்ததாக சீனி இறக்குமதியில் விதிக்கப்பட்ட ஒரு கிலோவுக்கான ஐம்பது ரூபாய் வரியினை 25 சதமாகக் குறைத்தததனால் அரசுக்குக் கிடைக்க வேண்டிய ஆநிரத்திற்கு அதிகமான கோடி ரூபாய்கள் இழக்கப்பட்டன.மேலும் எண்ணெய், வெள்ளைப்பூடு,சேதனப்பசளை,அரிசி இறக்குமதிகளிலும் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபோய்களை அரசு இழந்தது.





இவ்வாறிருக்க விவசாயத்தில் பசுமைப்புரட்சியினை ஏற்படுத்துவேன் என்ற ஜனாதிபதி இரசாயன வளமாக்கிகள்,இரசாயன நாசினிகளை எடுத்த எடுப்பிலே இறக்குமதி செய்யாது விட்டார்.விவசாய நிபுணர்கள்,விவசாயிகள் எத்தனையோ நியாயங்கள் கூறியும் அதனை ஜனாதிபதியோ,விவசாய அமைச்சரோ கவனத்தில் கொள்ளவில்லை,உதாசீனம் செய்துவிட்டனர். இதனால் விவசாயச் செய்கை 50 வீதத்திலும் அதிகமாக வீழ்ச்சி கண்டது.விளைவாக நெல், அரிசியின் விலை இரட்டிப்புக்கும் மேலாக உயர்ந்தது.உள்நாட்டில் மக்களின் தேவைக்கு ஏற்ப நெல்லுற்பத்தி இடம்பெறாததால் சீனா,மியன்மார் போன்ற நாடுகளிடம் இருந்து பல கோடி டொலர்களைச் செலவு செய்து அரிசியினை இறக்குமதி செய்ய வேண்டி இருந்தது. இந்த நிலையில் இரு தவறுகள் இடம்பெற்றன.இங்கு இரசாயனம் பாவிப்பதற்குத்தடை விதித்து விட்டு வெளிநாடுகளில் இருந்து இரசாயனம் மூலம் உற்பத்தி செய்த இரசாயனம் கலந்த உணவு இறக்குமதி செய்யப்பட்டது.அத்துடன் இந்த இறக்குமதிக்காகவும் பல கோடி டொலர்கள் செலவு செய்யப்பட்டன.

மேலும்,சர்வதேச நாணயநிதியத்திடம் கடன் வாங்க விரும்பாத இந்த அரசாங்கம் இறுதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக காலங்கடந்து சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தியது. ஆனால் அங்கு இருந்து இன்னும் கடன் கிடைக்கவில்லை.ரூபாவின் பெறுமதி டொலருக்கு நிகராக 200 ரூபாயாக இருந்த காலத்தில் சர்வதேச நாணயநிதியத்திடம் கடன் பெற்றிருந்தால் ரூபாவின் பெறுமதியானது இன்று டொலர் சார்பாக 340 ரூபாய் வரை அதிகரித்திருக்காது.ஏறத்தாழ ரூபாய் 200 இற்கு ஈடாக டொலரின் பெறுமதியைப் பேணி இருக்கலாம். சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளை தாம் ஏற்க மாட்டோம் என்ற பொதுஜனப் பெரமுனத் தலைவர்கள் இன்று,அதே நாணய நிதியத்திடம் கையேந்தியுள்ளனர்.. மேலும்,இறக்குமதிகள்,அபிவிருத்திக் கொந்துராத்துகள் அனைத்திலும் கமிசன் கையூட்டுகள் என்பன கறுப்பு வணிகமாகவும் கறுப்புப் பணத் தேடலாகவும் மாறியுள்ளன.இதனால் அரசாங்கத் தலைவர்களைப் பார்த்து திருடன் (ஹொரா ) என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளிப்படையாக அழைக்க முற்பட்டுள்ளனர். கொரோணாத் தாக்கத்தால் தொழில் இழந்து வருவாய் இழந்து மக்கள் நிர்க்கதியாக நிவாரணத்திற்காக ஏங்கிநிற்கும் நிலையில்,வீதிகளின் அபிவிருத்தி என்ற பெயரில் ஏற்கனவே அமைத்த வீதிகளுக்கு மேலாக வீதிகள் அமைக்கும் செயற்பாடுகளும் அதிகமாக நடைபெற்றுள்ளன.இந்த அபிவிருத்தி என்பது மக்களுக்கான அரசியல் காட்சிகளாக அமைவதோடு மட்டுமல்லாமல் கமிசன்,கையூட்டுகள், மண்வியாபாரம்,கல் வியாபாரத்திற்கான வாய்ப்புகளையும் ஆளும் அரசியல்வாதிகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ளன.உதாரணமாக செங்கலடிப் பிரதேச செயலகத்துக்கு ஊடாக 600 இற்கு மேற்பட்ட மண் பேமிற்றுகள் வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.இவை எந்த ஆளும் அரசியல்வாதிகளுக்காக வழங்கப்பட்டன என்பதை மக்கள் அறிவார்கள்.மேலும் பணத்தட்டுப்பாடு என்ற போர்வையில் பல்லாயிரக் காக்கான பில்லியன் ரூபாய்கள் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்சவின் காலத்தில் அச்சடிக்கப்பட்டன. இந்த நிலையில் அதிகரித்த பண நோட்டுகளாலும், பாவனைப் பொருட்களின் உற்பத்திகள், இறக்குமதிகள் குறைந்தததாலும் பணவீக்க நிலை ஏற்பட்டுள்ளது.ரூபாவின் நிலையற்ற தன்மையால் நாட்டில் பொருட்களின் விற்பனையானது நாளுக்கொரு விலையாகவும்,ஆளுக்கொரு விலையாகவும் தளம்பல் ஏற்பட்டுள்ளது. பொருட்களுக்கு தட்டுபாடு ஆனால் விலைக்காட்டுப்பாடு இல்லை என்ற நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

யுத்தமில்லாத நாட்டில் பாதுகாப்புச் செலவினத்துக்கான ஒதுக்கீடு என்பது மொத்தத் தேசிய உற்பத்தியில் 10.35 வீதமாக அதிகரித்துள்ளது. இந்தியாவில் 135 கோடி மக்கள் உள்ளனர்.அங்கு பாதுகாப்புப்படையினர் 27இலட்சம் பேர்வரை உள்ளனர்.ஆனால் இரண்டே கால் கோடி மக்களுள்ள நாம் நாட்டில் மூன்று இலட்சம்வரை படையினர் உள்ளனர்.அப்படிப் பார்த்தால் இந்தியாவில் 175 இலட்சங்கள் படைகள் இருந்திருக்க வேண்டும். ஆகவே பொருளாதாரத்தில் வங்குரோத்து நிலையில் உள்ள இந்த இலங்கையில் அளவுக்கதிகமான படைகளைப் பராமரிப்பதற்கு அதிகளவான பணம் விரயம் செய்யப்பட்டு வருகின்றது.அதே வேளை இப்படியான பொருளாதார நெருக்கடிக்குள் விமானக் கொள்வனவும் நடைபெற்றுள்ளது. பட்டினியால் மக்களின் வயிறுகள் எரிகின்றபோது பாதுகாப்புச் செலவுகள் அதிகரிப்பது என்பது அதிலும் அரசியல் வர்த்தகம் உள்ளதா? என்பதை கேட்கத்தூண்டுகிறது. இரசாயனப்பசளையைத் தடை செய்து விட்டு விவசாய உற்பத்தியை வீழ்ச்சியடைவதற்கு 4னாதிபதி வழிகோலியுள்ளார்.அதன்பின்னர் மில்லியன் கணக்கான டொலர்களை விரயம் செய்து பிறநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு இறக்குமதி செய்யப்படுவதால் ஆட்சியாளர்கள் சிலர் கொமிசன் பணம் பெறுகின்றார்களா? என்ற கேள்வியும் மக்களிடம் உள்ளது.மேலும் சேதனப்பசளை விடயத்திலும் கூட உள்நாட்டில் அவற்றை உற்பத்தி செய்யாமல் சீனா,இந்தியா போன்ற நாடுகளில் இருந்து அவை இறக்குமதி செய்யப்பட்டன.அதிலும்கூட சீனாவின் உரக்கப்பலில் இருந்து உரங்களை இறக்குமதி செய்யாததால்,தாமதக்கட்டணத்தை பல நூற்றுக்கணக்கான மில்லியன் டெலர்கள்கள் மூலம் செலுத்த வேண்டி ஏற்பட்டது.மேலும் ரூபாவின் பெறுமதி நாளுக்குநாள் உயர்வதால் அந்நியச்செலாவணியை உழைக்கும் நம்நாட்டவர்கள் அவற்றை இலங்கைக்கு அனுப்புவதையும் குறைத்து விட்டனர்.

மேலும்,இலங்கை பெற்ற கடன்களை மீளச்செலுத்துகின்ற சர்வதேச ரீதியான தரநிருணய மதிப்பீட்டுத் தகவலின்படி நம்பிக்கையற்ற நாடாக மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளது.அதாவது சீசீசீ(CCC) நிலையில் இருந்து சீசீ(CC) நிலைக்கு இறக்கப்பட்டு தற்போது சீ(C) நிலைக்கு மேலும் தாழ்த்தபட்டுள்ளது.இதனால் ஏனைய நாடுகள்,நிதியமைப்புகள் இலங்கைக்குக் கடன் வழங்குவதில் பின்னற்கின்றன.இலங்கையின் டொலர் கையிருப்பு 2021 ஆரம்பத்தில் 7 பில்லியன் டொலர்களில் (700கோடி டொலர்கள்)இருந்து 1.93 டொலர்களாக வற்றியுள்ளது.கொவிட் தொற்றுக் காரணமாகவும்,ரஷ்ய-உக்ரைன் யுத்தம் காரணமாகவும் இலங்கையின் உல்லாசப்பயணத்துறை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.இதனாலும் டொலர் வருவாய் இழக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சராக இருந்த பசில் டொலர் பற்றாக்குறை காரணமாக பல நூற்றுக்கணக்கான இறக்குமதிப் பொருட்களுக்கு தடை விதித்தார்.இதனால் இறக்குமதிகள் மூலமாகக் கிடைத்து வந்த பெரியளவான வரிவருமானங்களும் வீழ்ச்சியடைந்துள்ளன.இறக்குமதிகளை ஆட்சியாளர்கள் கட்டுப்படுத்தியபோது பரஸ்பரபுரிதலின்றி இலங்கையின் ஏற்றுமதிகளை ஏனைய நாடுகள் பெற்றுக்கொளவதையும் குறைக்கும் நிலைமைவளால் டொலர் வருமானம் குறைந்துள்ளது.

மேலும் இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை என்று சனாதிபதியும் இந்த அரசாங்கமும் குறிப்பிட்டமை உள்நாட்டு வெளிநாட்டுத் தமிழர்கள் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியது.அத்தோடு புலம்பெயர்ந்த தமிழர்கள் பலரையும்,தமிழ் அமைப்புகள் பலவற்றையும் சனாதிபதி விடுதலைப்புலிக்ள் சார்பான பார்வையில் கணித்து தடைவிதித்தார்.இதனாலும் அவர்களது டொலர்கள் இலங்கைக்கு உதவிகளாக அல்லது வருவாய்களாகக் கிடைக்கவில்லை.இல்நகையின் இனப்பிரச்சினையை ஏற்றுக்கொண்டு நியாயமான தீர்வை இந்த அரசாங்கம் வழங்கியிருந்தால் புலம்பெயர்ந்த தமிழர்களின் பாரிய டொலர் முதலீட்டினை இல்ங்கையரசு பெற்றிருக்க முடியும்.அதன்மூலமாகத் இளைஞர் யுவதிகள் தொழில்வாய்ப்புகளையும் பெற்றிருக்க முடியும்.மேலும் அரச நிறுவனங்கள்,நிருவாகங்கள் நியமனங்கள்,தொழில்வாய்ப்புகள் அரசியல்மயப்படுத்தப்பட்டன.புலமையாளர்கள்,நிபுணர்கள்,திறமையாளர்கள் ஒதுக்கப்படனர்.ஆதரவாளர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது.இதனால் பல அதிகாரிகள் நிருவாகிகள் அனுபவசாலிகள் ஒதுங்கினர் ஒதுக்கப்பட்டனர்.தாமாக முன்வந்து பதவிகளில் இருந்தும் விலகிக்கொண்டனர்.இதனைவிட சிவில்சேவை இராணுவ அதிகாரிகளால் படிபடியாக நிரப்பப்பட்டன.சனாதிபதியின் ஆலோசனைக் கட்டமைப்பான வியத்மகவினர் உயர்பதவிகளில் நியமிக்கப்பட்டனர்.அவர்களது ஆலோசனைகள் செயற்பாடுகள் சிங்கள பௌத்த மையமாக இருந்தன.நாட்டுக்கும் மக்களுக்கும் பொதுமையாக அமையவில்லை. நிதிக்கொள்கை,பொருளாதாரக்கொள்கை என்பன தூரநோக்கற்றவையாக அமைந்தன.கடன்களை வாங்குவதிலும் வளங்களை நீண்டகாலக்குத்தகைக்கு விடுவதிலுமே பொதுஜனப்பெரமுனத் தலைவர்கள் ஆர்வம் காட்டினர்.இனவாத மதவாத மாயைக்குள் சிங்கள மக்களை வைத்துக்கொண்டு சுயநல சுயலாப அரசியல் பொருளாதார சமூக கலாசார செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.அதனால் நீண்டநேர மின்சாரவெட்டுகள்,இருளாட்சி,பெற்றோலியப் பொருட்களின் தட்டுப்பாடு,பொருட்களின் விலையேற்றம்,வரிசை வாழ்க்கை,வருவாய் இன்மை,தொழிலின்மை,குடும்ப ஆட்சி,அடக்குமுறை,அதிகாரதுஸ்பிரயோகம்,ஊழல் மோசடிகள்,பாரபட்சம் போன்ற பன்மைக்காரணிகள் பொதுமக்களின் தன்னெழுச்சியினையும்,இயல்பூக்க செயற்பாடுகளையும் தட்டியெழுப்பி உள்ளன.ஆட்சியாளர்களின் இனவாத மதவாத மாயவலைகளில் இருந்து சிங்கள மக்கள் தற்காலிகமாக த்மமைத்தாமே விடுதலையாக்கியுள்ளனர்.



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

முன்னாள் சிங்ளசிப்பாய் ஒருவர் குறிப்பிட்ட விடயம் கவனிக்கத்தக்கது. 20 ஆண்டுகளாகத்தான் போராடி மீட்ட நாட்டைத் பிறநாடுகளுக்கு துண்டு துண்டாக இந்த ஆட்சியாளர்கள் விற்கிறார்களாம்.அதனைவிட பிரபாகரனிடம் வடக்கு கிழக்கைக் கொடுத்திருந்தால் அவர் அதனை அபிவிருத்தி செய்திருப்பார்.இப்படியான நெருக்கடிகள் வந்தால் அவரிடம் இருந்தே உதவிகளை நாம் பெற்றிருக்கலாம் என்று அந்த சிங்கள சிப்பாய் ஒலி ஒளிப்பதிவு மூலமாக கருத்து வெளியிட்டிருந்தார்.இது இனவாதமற்ற உண்மைக்கருத்தாகும். இப்படியாக சிங்கள மக்கள் சிந்தித்தால் இனவாதம் அகலும்,இனப்பிரச்சினை சுயநிருணய அடிப்படையில் தீரும்.புலம்பெயர் நம்நாட்டு உறவுகளின் ஆற்றல் வல்லமை செலவத்தால் நம்நாட்டையே செழிக்க வைக்க முடியும்.

நாட்டைத் துண்டு துண்டுகளாக அயல்நாடுகளுக்கு விற்பதைவிட சிங்கள தமிழ் முஸ்லிம் பறங்கியர் சமூகங்கள் சமத்துவ சம உரிமைகளோடு வழ்ந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.இனவாத அரசாங்கங்கள் 74 ஆண்டுகளாக ஆட்சி செய்தார்கள்.அவர்களது வீடுகள் வியாபார நிலையங்கள் செழித்தன,அயல்நாடுகளிலும் கறுப்புப்பணத் திரட்டல்கள் திருட்டுகளால் சொத்துகள் குவிந்தன.ஆனால் நாடு குட்டிச்சுவரானது,மக்கள் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றனர்.தமிழ்பேசும் மக்கள் சமூக பொருளாதார அரசியல் நெருக்கடிகளால் 74 ஆண்டுகளுக்கு மேலாகத் தவிக்கின்றனர்.அவர்களுக்கு முறையான அரசியல் தீர்வு வழங்கப்பட்டால் சமூக பொருளாதார நெருக்கடிகளை அவர்களே தீர்த்துக்கொள்வார்கள்.நாடு அபிவிருத்தி அடையும்,மக்களும் சௌபாக்கியம் அடைவர்.





# கந்தளாய் குளம் உடைப்பின் மக்களின் கண்ணீர் கதைகள்







எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகின்ற நன்னீர் குளங்களுள் கந்தளாய் குளம் மிகப்பெரிய குளமாக காணப்படுகின்றது.

இக் கந்தளாய் குளமானது கந்தளாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்து காணப்படுகின்றது.

கந்தளாய் குளத்தினை குளக்கோட்டன் மன்னன் கட்டியதாகவும்,கி.மு 19 ஆம் நூற்றாண்டில் முதலாம் அக்போ மன்னனால் அத்திவாரமிடப்பட்டு,இரண்டாம் அக்போ மன்னனால் கந்தளாய் குளம் கட்டி முடிக்கப்பட்தாக வரலாறுகள் கூறுகின்றன.

கந்தளாய் குளத்திற்கு போதுமான நீர் மின்னேரிய,மகாவலி ஆறுகள் கூடாக நீர் வந்து சேருகின்றன.

கந்தளாய் குளத்து நீரினைப் பயன்படுத்தி ஆரம்ப காலங்கள் தொட்டு இற்றை வரை தம்பலாகாமம்,முள்ளிப்பொத்தானை,வான்எல,வட்டுக்கச்சி,கிண்ணியா,ஜயந்திபுர,மற்றும் சூரியபுர போன்ற பகுதிகளுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக நீர் திறந்து விடப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் குளம் உடைப்பெடுத்ததனால் நூற்றி இருபதிற்கும் மேற்பட்ட உயிர்கள் காவுகொள்ளப்பட்ட வரலாறும் கடந்த காலங்களில் பதிவாகியுள்ளது.

1986 ஏப்பிரல் மாதம் 20 ஆம் திகதி கந்தளாய் குளம் உடைப்பெடுத்ததனால் கந்தளாய் பிரதேசம் பாரிய அழிவுகளுக்கு முகம் கொடுத்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன.

கந்தளாய் குளம் உடைப்பெடுத்த பொழுது நீர் மட்டம் பதினைந்தடிக்கு காணப்பட்டதாவும் இதனால் நீரீன் வேகம் அதிகரித்ததால் கந்தளாய் குளம் குடைந்ததாக வரலாற்று பதிவுகள் சான்று பகிர்கின்றன.

இவ் அனர்த்தத்தினால் நூற்றி இருபதிற்கும் மேற்பட்ட உயிர்கள் பலியானதோடு,இதில் பலர் மயிரிழையில் தப்பி தற்போதும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதன் போது 1620 வீடுகள் சேதமானதோடு,2000 த்திற்கும் ஏக்கல் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டன.2000த்திற்கும் மேற்பட்ட மக்கள் இவ்அனதத்தினால் பாதிக்கப்பட்டார்கள்,இந்த செயற்பாடு அக்காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட பாரிய அனர்த்த உயிர்ச்சேதமாக பேசப்பட்டது.

> **1986 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி கந்தளாய் குளம் உடைப்பெடுத்தனால் கந்தளாய் பிரதேசம் பாரிய அழிவுகளுக்கு முகம் கொடுத்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. கந்தளாய் குளம் உடைப்பெடுத்த பொழுது நீர் மட்டம் பதினைந்தடிக்கு காணப்பட்டதாவும் இதனால் நீரீன் வேகம் அதிகரித்ததால் கந்தளாய் குளம் குடைந்ததாக வரலாற்று பதிவுகள் சான்று பகிர்கின்றன.**

இந்த குளம் உடைப்பின் பிற்பாடுதான் அரசாங்கத்தினால் கந்தளாய் குளம் விசாலமாக்கப்பட்டு தற்போது காணப்படுகின்றது. இக்குளத்தில் தற்போது 16ஆயிரத்து 800 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கந்தளாய் குளத்தில் நீர்மட்டம் அதிகரிக்கின்ற போது சரியான நேரத்தில் மேலதிக நீரை வெளியேற்றி நீர்மட்டத்தினை சமநிலைப்படுத்துகின்ற செயற்பாடுகளில் பொறியியலாளர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மீண்டுமொரு தடவை கந்தளாய் குளம் உடைப்பெடுக்காது இறுக்கமான நிலையில் அனைத்துப் பக்கமும் அமைந்து காணப்படுகின்றது.

இந்த அனர்த்தம் கந்தளாய் வாழ் மக்களுக்கு ஆராத வடுக்களாகவே இன்னமும் இருந்து கொண்டிருக்கின்றது.

இதில் தமிழ் சிங்கள மற்றும் முஸ்லிம் உறவுகள் பலரும் பலியாகி இருக்கின்றார்கள்.

இவ்வனர்த்தம் ஏற்பட்டு இற்றைக்கு36 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

36 வருட நினைவையொட்டி கந்தளாய் பிரதேசத்தில் பல்வேறு விசேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றுள்ளன.

இந்த நினைவேந்தல் நிகழ்வு கடந்த புதன்கிழமை(20) கந்தளாய் பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நினைவு கூறப்பட்டு விசேட பிராத்தனைகளும் இடம்பெற்றன.தேவேளை அன்றைய தினம் கந்தளாய் சிவன் ஆலயத்திலும் விசேட பூஜைகள் இடம்பெற்றன மரணித்த உறவுகளின் ஆத்மா சாந்தியடைய.

இவ்வாறு ஒவ்வொரு ஆண்டுகளும் நினைவு கூர்வதும் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

# விழி நீர் காணிக்கை



தூரநோக்கு கலைஞன்
துடிப்பான இளைஞன்
நுண்கலையை கற்றான்
அனுபவத்தில் தேர்ந்தான்
கட்டுரைகளை எழுதினான்
கடல்தாண்டியும் அறிமுகமானான்
துடிப்புடனே செயற்பட்டான்
செய்தி சேகரிப்பிலும் ஈடுபட்டான்
சுபீட்சத்திற்கும் செய்தியாளனான்
சுதந்திரமாய் எழுதினான்
விருதுகள் வென்றான்
மண்ணுக்கு நூலையும் தந்தான்
விழிகள் மூடி விடைகள் பெற்றான்
விண்ணுலகில் நிரந்தரமானான்
துறையூர் ஈன்ற மோகன தாசன்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**அமரத்துவமடைந்த இளம் ஊடகவியலாளன்
பாக்கியராசா மோகனதாஸ் அவர்களின் ஆத்மா இறைவன்
பாதங்களை சென்றடைய நாமும் பிரார்த்திக்கின்றோம்.**

சுபீட்சம்

ஊடகவியலாளர்கள், ஆசிரியர், பணிப்பாளர் சுபீட்சம் குழுமம்




# மோகனதாஸ் என்ற இளம் ஊடகவியலாளன் மௌனமானான்

**பருவான் பாலகன்**

**இளம் ஊடகவியலாளனும், எழுத்தாளனும், ஆசிரியருமான பாக்கியராசா மோகனதாஸ் சனிக்கிழமை(23) இயற்கை எய்தினார்.**
**குறுகிய காலத்திலேயே துடிப்போடு செயற்பட்டு சமூகம் சார் பிரச்சினைகளையும், கலைஞர்களின் இதயதுடிப்பையும் வெளிக்கொணர்ந்தவன், படைப்பாக்க நூலுக்கு சொந்தக்காரன். 33மூன்று வருடங்கள் மண்ணிலே வாழ்ந்து தேசிய பத்திரிகைகளில் 300க்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளான் இன்று நிரந்தரமாய் தூங்கி விட்டான்.**
**பலரையும் நேர்கண்ட அவனை நாமும் நேர்கண்ட போது அவன் கூறிய கருத்துக்கள்.**

### துறையூர் எழுத்தாளர் பாக்கியராஜா மோகனதாஸ் அவர்களுடனான நேர்காணல்.

எழுத்துத் துறையானது மிகவும் பிடித்தமான துறையாகவும் சுதந்திரமானதும் உண்மையானதும் பொது மக்களுக்காக இயங்கும் துறையாகவும் சமூகத்துடன் இருந்து சமூகம் சார்ந்து செயற்படக்கூடிய துறையாகவும் எனக்கு இருந்து கொண்டிருக்கின்றது என எழுத்துத் துறை சார்ந்து செயற்பட்டு வரும் துறைநீலாவணையைச் சேர்ந்த துறையூர் தாஸன் என மக்களால் அறியப்படும் பாக்கியராஜா மோகனதாஸ் வாசகர்களுக்காக இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

**கேள்வி :- பல துறைகளிலும் உங்களுக்கு ஒரு அனுபவம் இருக்கின்றது. பல துறைகளிலும் நீங்கள் தடம் பதித்திருக்கின்றீர்கள். அந்த வகையில் உங்களது ஆரம்ப காலத் துறை எழுத்துத் துறையாகத்தான் இருக்கின்றது. இந்த எழுத்துத் துறைக்குள் எப்படியாக வந்தீர்கள்?**

பதில் :- கிழக்கிலங்கையின் மீன் பாடும் தேனாடு, கலைகளின் களஞ்சியம் எனப் போற்றப்படும் மட்டக்களப்பு மாநகரின் தென் எல்லைக் கிராமமான துறைநீலாவணையை பிறப்பிடமாகக் கொண்டவன். தரம் ஒன்று தொடக்கம் உயர் தர கலைப்பிரிவு வரை துறைநீலாவணை மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்று உயர்தரத்தில் தேறி கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு தெரிவாகியிருந்தேன்.

உயர்தரம் படிக்கும் காலங்களில் பாடசாலையின் நாடகமும் அரங்கியல் பாட ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச் சென்றதினால், எங்களுக்கு கற்பிக்கப்படாது இருந்த அரங்கியல் பாடத்தினை, பாடசாலை அதிபரின் அனுமதியுடன் பாடசாலை மாணவனாக சீருடையில் இருந்து கொண்டு என்னுடன் கலைப்பிரிவில் நாடகமும் அரங்கியலும் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் சாதாரண தர, பத்தாம் தர மாணவர்களுக்கும் கற்றுக்கொடுக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்திருந்தது.

புத்தகங்கள் கொப்பிகள் குறிப்புகளை பயன்படுத்தாமல், மனதிலிருந்த தேடியறிந்த கற்ற விடயங்களையே கற்பித்து கொடுப்பதாகவே எனது முறைமை அமைந்திருந்தது. அம்முறைமை மாணவர்களுக்கும் பிடித்திருந்தது. பாடசாலையை விட்டு வெளியேறிய பின்பும் இந்நிலை இருந்தது. இற்றை வரைக்கும் இந்நிலை தொடர்கிறது.

அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நான்கு வருட நுண்கலைமாணி, நாடகமும் அரங்கக் கலையினை கற்று இள நுண்கலைமாணி சிறப்பு பட்டத்தினை பூர்த்தி செய்து. தற்போது சமூகத்துக்கு என்னாலான என் திறமையினாலான செயற்பாடுகளை செய்து கொண்டு வருகின்றேன்.

பாடசாலையில் படிக்கும் காலங்களில் தமிழ் மீது கொண்ட பற்றினால் நிறைய புத்தகங்களை வாசிப்பதை பழக்கமாகக் கொண்டிருந்தேன். அதுவே என் எழுத்துத் துறைக்கு வித்திட்டது. உயர்தரத்தில் படிக்கும் காலங்களில் நிறைய புத்தகங்களை அலசி ஆராய்வதனுடன் கட்டுரைப் போட்டிகளிலும் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன்.

படிக்கும் காலங்களிலேயே சமூக சிந்தனை, சமூகம் சார்ந்த செயற்பாடுகளில் இயல்பூக்கம் ஏற்பட்டது. சமூகம் சார்ந்த சிந்தனை என் குருதியோடு இரண்டறக் கலந்ததாக எண்ணத் தோன்றுகின்றது. இற்றை வரைக்கும் சுயநலமாக என்னை பற்றி என் குடும்பத்தை பற்றி கவனியாது கலையிலக்கியத்துக்காகவே வாழ்ந்து வருகின்றேன். எழுத்துத் துறையானது மிகவும் பிடித்தமான துறையாகவும் சுதந்திரமானதும் உண்மையானதும் பொதுமக்களுக்காக இயங்கும் துறையாகவும் சமூகத்துடன் இருந்து சமூகம் சார்ந்து செயற்படக்கூடிய துறையாகவும் எனக்கு இருந்து கொண்டிருக்கின்றது.

**கேள்வி :- உங்களுடைய குடும்பப் பின்னணியில், எழுத்துத் துறை சார்ந்து வேறு யாரும் இருக்கின்றார்களா ?**

பதில் :- இல்லை என்று தான் கூறவேண்டும். எனக்கு உயிர் கொடுத்த தந்தை ஆண்டுகள் ஏழு வரையுமே கல்வி கற்றவர். எனக்கு உருவம் கொடுத்த தாய் சாதாரண தரம் வரை கல்வி கற்றவர். எனது அம்மப்பா தங்கராசா என்பவர் விச வைத்தியத் துறையில் சிறந்து விளங்கியவர். தான் எழுதியதற்கு எழுதுவதற்கு ஏதுவாக இருந்தவை சமூகம் சார்ந்த எண்ணப்பாடும் வீட்டில் எனக்கு கிடைத்த பூரண சுதந்;திரமும் இயல்பூக்கமுமேயாகும். வீட்டில் மூத்த பிள்ளையாகவும் ஆண் மகனாகவும் தலாட்டி சீராட்டி பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் செல்லப் பிள்ளையாகவே வளர்க்கப்பட்டேன்.

காலையில் வீட்டை விட்டு புறப்பட்டால் வீடு வந்து சேர இரவு பதினொரு பன்னிரெண்டு மணி ஆகும். சில வேளை வராமல் விடுவதும் உண்டு. கலையிலக்கிய நிகழ்வுகள், இலக்கிய சந்திப்புகள், பாரம்பரிய ஆற்றுகைகளை கண்டுகளித்தல், இளைஞர் கழக பயிற்சிப் பட்டறைகள், கலை நிகழ்வுகள், ஊடக பயணங்கள் இவ்வாறு பல மணித்தியாலங்கள் வெளியிலேயே கடந்து செல்லும். சில வேளைகளில் தங்கி நிற்க வேண்டிய தேவையும் ஏற்படும்.

எனது வாழ்நாளில் முழுமையான நேரத்தை கலையிலக்கிய பயணங்களுக்காகவும் வாசிப்புக்காகவும் எழுதுவதற்காகவுமே ஊடகத்துக்காகவுமே செலவிட்டுள்ளேன். வீட்டில் இருக்கும் நேரத்தை விட களத்தில், எழுத்தில் நிற்கும் நேரமே அதிகமாகவிருந்தது. இவ்வாறே எனது பல்வேறு ஆக்கபூர்வமாக விடயங்களுக்கு பெற்றோரும் உறவினர்களும் எனக்கு பக்கபலமாக இருந்துள்ளனர். இன்னொரு பிறவியிருந்தால் இவர்கள்தான் என் பெற்றோராக அமைய வேண்டும்.



**கேள்வி :- எழுத்துத் துறை என்று பார்க்கின்ற போது எப்படியான என்ன மாதிரியான விடயங்களை எழுதுகின்றீர்கள்.**

பதில் :- கட்டுரைகள், மேடை நாடகங்கள், கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றை எழுதியுள்ளேன். பாடசாலை மாணவர்களின் போட்டிகளுக்காக நாடகப் பிரதிகளை எழுதிக் கொடுத்துள்ளேன். கதை, கவிதைகளை அவ்வப்போது எழுதி வருகின்றேன். சமூகம், சமூக இலக்கியம், பாரம்பரியக் கலையிலக்கியம், பாரம்பரியக் கலையாற்றுகைகள் மற்றும் ஆளுமையாளர்கள் சார்ந்த விடயங்களையே பெரும்பாலும் எழுதி வருகின்றேன். விளிம்பு நிலை பாரம்பரியக் கலையிலக்கியங்கள் சமூக மட்டத்தில் எவ்வாறு உள்ளது, அதன் இருப்புகள், முக்கியத்துவம், அதனை எவ்வாறு வளப்படுத்தி மேம்படுத்தல், எவ்வாறு தக்க வைத்துக்கொள்ளல், விளிம்பு நிலை கலைஞர்களின் தேவைப்பாடுகள் அவர்களது சவால்கள் ஆகிய விடயங்களையே எனது கட்டுரைகள் பேசுவதாகவுள்ளது.

**கேள்வி :- நீங்கள் முதன் முதலாக எழுதிய கட்டுரை எது?**

பதில் :- பாடசாலையில் படிக்கும் காலங்களிலே நிறைய புத்தகங்களை வாசிக்கும் போது ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்து படிப்பதை வழக்கமாக கொண்டிருந்தேன். எந்த விடயங்களையும் தலைப்புகளையும் அதன் ஆழ அகலம் வரை செல்வதற்கு விருப்பட்டவனாக இருந்தேன்.

இப்போது உங்கள் கேள்விக்கு வருகின்றேன். முதன் முதலாக பத்திரிகைகாக பாரம்பரியக் கலையின் இன்றைய நிலை, பாரம்பரியக் கட்டியக்காரனின் இன்றைய நிலை, இலக்கிய அரங்கப் பாரம்பரியம் ஆகிய மூன்று கட்டுரைகளை முறையே தினக்குரல், சுடர்ஒளி மற்றும் தினகரன் ஆகிய மூன்று செய்தித்தாள்களுக்கும் பா.தாஸன்(சஞ்சயன்) எனும் பெயரில் தபால் மூலம் அனுப்பி வைத்தேன். அனுப்பி ஒரு வாரங்களின் பின்னர் தினக்குரல் ,சுடர் ஒளி மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகையில் அம்மூன்று கட்டுரைகளும் முறையே பிரசுரமாகியிருந்தது.

முதன் முதலாக பத்திரிகைகாக எழுதிய மூன்று கட்டுரைகளையும் (2012.11.11) செய்தித்தாளில் பார்க்கும் போது எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தேன், பூரிப்படைந்தேன். எனது கட்டுரைக்கு கொடுக்கப்பட்ட முதல் வரவேற்பும் ஆதரவுமாக அப்பிரசுரங்கள் அமைந்திருந்தது. தினக்குரலில் பணி புரியும் பாரதி இராஜநாயகம், ந.லெப்ரின்ராஜ் மற்றும் பத்திரிகை குழுமத்தினர் ஆகியோர் என்றும் மறக்க முடியாதவர்கள். என்னை முதன் முதலாக ஊக்கப்படுத்தியவர்கள் அவர்கள்தான். இப்பொழுதும் ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

பிரசுரமான படைப்பை எனது பெற்றோரிடமும் உறவினர்களிடமும் நணபர்களிடமும் காட்டி உள்ளூர மன மகிழ்ந்தேன். அக்கட்டுரை எனக்கு ஆத்ம திருப்தியை தந்தது. அதன் பின்னரே செய்தித்தாள்களுக்கு கட்டுரைகள் எழுத வேண்டும் என்ற எண்ணம் மேன் மேலும் மேலேழுந்தது. நிறைய கட்டுரைகள் எழுதுவதற்கு என்னை ஊக்கப்படுத்தியவை பத்திரிகைகள் தான் என்பதை மறக்கவும் மறுக்கவும் மாட்டேன். ஒவ்வொரு கட்டுரைப் படைப்பும் எனக்கு ஒரு பிரசவமாகவே இருக்கிறது. ஒவ்வொரு பிரசுரமான கட்டுரைகளின் ஒவ்வொரு விடயங்களையும் மீளப் பார்க்கும்போது பிஞ்சுக் குழந்தைகளை பார்ப்பது போன்று இருக்கும். இன்று வரை கட்டுரைகளை ஆத்ம திருப்திக்காகவும் சமூகத்துக்காகவும் மாத்திரமே எழுதி வருகின்றேன்.

**கேள்வி :- ஊடகத்துறைக்குள் எப்பொழுது வந்தீர்கள், என்ன மாதிரியான செயற்பாடுகளை செய்துகொண்டு வருகின்றீர்கள் ?**

பதில் :- தான் முன்னர் குறிப்பிட்டது போன்று சமூகம் சார்ந்த சிந்தனை சமூகம் சார்ந்தே செயற்பாடே ஊடகத்துறைக்குள் என்னை இழுத்துவிட்டது. சமூகத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ,அவர்களது அடிப்படைத் தேவைகள், உரிமைகள் மறுக்கப்படும் போது அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் போன்றவற்றை கூறுவதற்கு ஊடகம் தான் மிகச்சரியான ஆயுதமாக எனக்கு இருந்தது.

சமூகத்தின் உண்மையான பிரதிநிதிகளாக இருப்பவர்கள் கலைஞர்களும் படைப்பாளர்களும் ஊடகவியலாளர்களுமே. சமூகத்தின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள், சமூகத்தின் பிரச்சினைகளை சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை அவர்களது உரிமைகளை எழுத்தின் ஊடாக தட்டிக்கேட்பவர்களாக, உரிமைகளை பெற்றுக்கொடுப்பவர்களாக இருக்க வேண்டும்.

கடந்த ஆறு வருட காலத்துக்கு மேலாக பத்திரிகைகளுக்கு கலையிலக்கிய சமூக வரலாறு சார்;ந்த கட்டுரைகள் எழுதிக்கொண்டிருக்கும் போது திறமையாற்றல் எழுத்தாற்றலினால் என்னால் ஊடகத்துறைக்குள் நேர்மையான வழியில் நுழைய முடிந்தது. எப்பொழுதும் நேர்மையாக பயணிப்பது சந்தோசமாகவே இருக்கும். அப்போது தான் மக்களின் பிரச்சினைகளை தைரியமாக எவருக்கும் பீதியடையாமல் வெளிப்படுத்த முடியும். மற்றவர்களின் தயவுடன் பயணிப்போமாக இருந்தால் சுதந்திரமாகவோ நேர்மையாகவோ செயற்பட முடியாது. மக்களுடன் வாழ்ந்துகொண்டு பொது மக்களது பிரச்சினைகளை வெளிப்படுத்துவதென்பது ஒரு வித அனுபவம். ஊடகம் என்பது ஒரு தொழில் அல்ல. எம்மை நம்பியிருக்கும் மக்களுக்கு இருபத்திநான்கு மணி நேரமும் களத்தினின்று, ஒரு தியாக உணர்வோடு, சேவை செய்ய வேண்டிய சமூக சேவையாக எனக்கு இருந்து கொண்டிருக்கின்றது.

**கேள்வி :- இப்பொழுது உங்களுடைய கட்டுரைகள் மற்றும் படைப்புகளை பத்திரிகைகளின் வாயிலாகத்தான் நாங்கள் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. அதையும் தாண்டி உங்களுடைய வாசகர்களுக்கு பல ஆதங்கங்கள் இருக்கக் கூடும். ஏன் இது வரை புத்தகங்கள் வெளியீடவில்லை, இன்னும் வெளி வராமைக்கு என்ன காரணம் என்று அவர்களுடைய மனதில் இப்படியான ஆதங்கங்கள் இருக்க கூடும். ஏன் இது வரைக்கும் நீங்கள் புத்தகங்கள் வெளியிடவில்லை?**

பதில் :- புத்தகங்களை வெளியீட வேண்டும் என்ற எண்ணம் இற்றை வரைக்கும் இல்லை. எனது படைப்புகள் கடந்த ஆறு வருட காலமாக செய்தித்தாள்களில் பிரசுரமாகிக்கொண்டிருக்கின்றது. எனது படைப்புகளை வாசகர்கள் பார்த்துக்கொண்டு எனது படைப்புகளுக்கான வரவேற்பையும் ஊக்கப்படுத்தலையும் தந்து கொண்டிருக்கின்றார்கள்.

எனது படைப்புகள் எழுத்துக்கள் பிறருக்கு, வருங்கால சந்ததிக்கு தேவைப்படுமாயின் தேவைப்பாடு இருப்பின் எனது உறவினர்களிடமிருந்து படைப்புகளை பெற்றுக்கொண்டு வருங்கால சந்ததியினர் நண்பர்கள் எனது படைப்புகளை நூலுருவாக்க முடியும்.

நிறைவான தேவையான கட்டுரைகள் எழுத வேண்டுமே தவிர புத்தகங்களை எழுத வேண்டும் என்ற எண்ணம், இற்றை வரைக்கும் இல்லை. அதற்கான சாத்தியப்பாடுகள் இனியும் இருக்காது.

**கேள்வி :- கட்டுரைகள் எழுதுவதாக கூறியிருந்தீர்கள், அவ்வகையில் எவ்வாறான கட்டுரைகளை எப்பொழுது இருந்து எழுதி வருகின்றீர்கள் ?**

பதில் :- யாழ்ப்பாண திருநெல்வேலியைச் சேர்ந்த முது பெரும் நாடகாசிரியர் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் போர்க்கால உளவியல் நாடகங்கங்களுள் அன்னையிட்ட தீ மற்றும் எந்தையும் தாயும் ஆகிய இரு நாடகங்களை அடிப்படையாக வைத்து என் ஆய்வு அமைந்திருந்தது. போர்க்காலத்திற்குள் யுத்தத்தினால் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கிய துன்பதுயர சவால்களை அவர்களது வாழ்க்கை முறைகளை,

**மிகுதி 11 ஆம் பக்கம் பார்க்க...**

# மோகனதாஸ் என்ற இளம் ஊடகவியலாளன் மௌனமானான்



போர்க்காலச் சூழலுக்குள் அவர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள், அவர்கள் ஒவ்வொருவரினதும் உள்ளக் குமுறல்களை ஆசிரியர் எவ்விதம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை ஆராய்வதாக என் ஆய்வு அமைந்திருந்தது.

ஒரீரு சொற்கள் பந்திகளுக்கூடாக நிறைய விடயங்களை ஆராய முடியும். அதுதான் ஆராய்வாக இருக்க முடியும் என கருதுகின்றேன். சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நாடகத்துறை சார்ந்து படிக்கும் காலங்களில் கள ஆய்வு பரீட்சைக்காக, பாரம்பரியக் கலைஞர் வேலாட்சி வல்லிபுரத்தின் கலையிலக்கியம் சார்ந்த விடயங்கள் மற்றும் அவரினது ஆளுமைகளை நேர்காணல் செய்து ஒரு தொகுப்பாக சமர்ப்பித்திருந்தேன். எனது ஒவ்வொரு கட்டுரைகளும் ஆய்வாகவேயுள்ளது. கலை இலக்கிய விடயங்களை பரந்தளவில் ஆழ அகல நுணுக்கமாகவே ஆராய்ந்துள்ளேன். அகரம் அமைப்பினால் வெளிவரும் விருந்து சஞ்சிகையிலும் காற்றுவெளி மின்னிதழ் போன்ற இணையத்தள மின்னிதழ்களிலும் எனது கட்டுரை படைப்புகள் வெளிவந்தவண்ணமுள்ளது.

**கேள்வி :- எழுத்துத் துறையில் இருந்து எப்படியாக மேடை நாட கலைஞராக, மேடை நாடகத்தில் நடிக்கும் ஆர்வம் ஏற்பட்டது?**

பதில் :- உயர்தரம் படிக்கும் காலங்களில், நாடகமும் அரங்கியல் மாணவர்களையே கலையிலக்கிய நிகழ்வுகளில் மேடையேற்ற வைத்துவிடுவார்கள். ஏனையவர்கள் அது பற்றித் தெரியாது நடிக்க வராது என்று தப்பித்துக் கொள்வார்கள். பாடசாலைக் காலங்களில் பதினைந்துக்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளேன். நிறைய விடயங்களை மனப்பாடம் செய்யும் முறைமையினை நாடக அரங்கியல் பாடமே எனக்கு கற்றுத் தந்தது.

உயர்தர கலைத்துறையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் ஏ தர சித்தியுடன் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்து தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கும் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கும் தெரிவாகியிருந்தேன். நாடகத்துறையின் மீது கொண்ட நாட்டத்தினால், அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நான்கு வருட கற்கை நெறியை மேற்க்கொள்ளும் காலங்களில் நாடகச் செயற்பாட்டில் தானும் ஒருவனுமாக செயற்பாடு கொள்கைகள் சார்ந்து நிறைய விடயங்களை அறிந்து கொண்டேன்.

பல்கலை பரீட்சைகாக தனியனாக நாடகங்களை எழுதி தயாரித்து நடித்து மேடையேற்றியுள்ளேன். அங்கு படித்த ஒவ்வொரு மாணவர்களும் இச்செயற்பாட்டில் ஈடுபட்டனர். ஒவ்வொரு மேடையேற்ற நாடகங்களும் ஒவ்வொரு அனுபவத்தையும் படிப்பினைகளையும் கற்றுத் தந்தது. பல்கலைக்கழகத்தை விட பாடசாலையே, அடிப்படையான நிறைய விடயங்களை கற்றுத் தந்தது. அவ்வகையில் எனக்கு நாடகத்துறை சார்ந்து கற்பித்த ஆசிரியர்கள் மிகவும் போற்றப்பட வேண்டியவர்கள். பல்கலைக்கழகம் நுண் அரசியல் களமாகவும் பாடசாலை சமத்துவம் மிகுந்த களமாகவும் எனக்கு தென்படுகிறது.

**கேள்வி :- வளர்ந்து வருகின்ற எழுத்தாளர்களைப் பொறுத்த வரை ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆளுமையாளர்களை மாதிரியாக கொள்வார்கள். அவர்களுடைய சாயல் ,பாணி அவர்களது எழுத்துக்களில் இருக்கும். உங்களது எழுத்துக்களுக்கு ஏதாவது தனி அடையாயங்கள் இருக்கின்றனவா இல்லாவிட்டால் வேறு யாரும் எழுத்தாளர்களினுடைய சாயலை பின்பற்றுகின்றீர்களா?**

பதில் :- தனியடையாளங்கள் இருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும். சமூகத்தில் கவனிக்கப்பட வேண்டிய ஆனால் பிறரால் கவனிக்கப்படாத விடயங்களையே எனது எழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. விளிம்பு நிலை கலை வடிவங்களின் தேவை, முக்கியத்துவம், இருப்பு, சமூகப் பண்பாடு, பன்மைத்துவம் போன்ற விடயங்களை கட்டுரைகளுக்கூடாக ஆராய்ந்துள்ளேன்.

சாதாரண சமூகங்கள் வாழ்கின்ற இடங்களுக்கு சென்று அவர்களுடன் வாழ்ந்து அவர்களுடன் பேசி அவர்களது செயற்பாடுகளை, கலையிலக்கிய பண்பாட்டு மரபுகளை, சவால்களை, ஆதங்கங்களை கேட்டறிந்து அவர்களுக்கூடாகவே அவர்களது விடயங்களுக்கூடாகவே எனது ஒவ்வொரு ஆய்வு கட்டுரைகளும் வெளிக் கொண்டு வரப்படுகின்றது.

**கேள்வி :- நீங்கள் புத்தகங்கள் இதுவரை வெளியீடவில்லை. பத்திரிகைகள் ஊடாகத்தான்,அவற்றைத்தான் ஒரு ஆயுதமாக களமாக பயன்படுத்துகின்றீர்கள். அந்த வகையில் உங்களது படைப்புகள் உங்களது பெயரிலா இல்லை புனைபெயரிலா வெளி வருகின்றது.?**

பதில் :- பாரம்பரியக் கட்டியக்காரனின் இன்றைய நிலை எனும் முதல் கட்டுரை, வீட்டில் அழைக்கும் பெயருடனும் புனைபெயரிலுமாக பா.தாஸன்(சஞ்சயன்) எனும் பெயரில் பிரசுரமாகியிருந்தது. அதன் பிற்பாடு எனது ஊரின் பெயரின் முன் எழுத்துக்களுடனும் எனது பெயருடனுமாக துறையூர் தாஸன் எனும் பெயரிலும் வெளியாகியிருந்தது. தந்தையின் பெயருடனும் எனது வீட்டுப் பெயருடனுமாக இணைத்து பாக்கியராஜா தாஸன் எனும் பெயரிலும் ஒரு சில கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

எழுதத் தொடங்கி மூன்று மாதம் கடந்ததும் அனைத்துக் கட்டுரைகளும் பாக்கியராஜா மோகனதாஸ் எனும் எனது முழுப்பெயரிலேயே வந்தது. இப்பொழுதும் அவ்வாறே வந்துகொண்டிருக்கின்றது.

**கேள்வி :- வெவ்வேறு பெயர்களில் எழுதுகின்ற போது இது உங்களுடைய படைப்புதான் என்பதை எவ்வாறு வாசகர்கள் இனங்காண்கின்றனர்?**

பதில் :- கடந்த ஆறு வருட காலமாக 450 க்கு மேற்பட்ட கட்டுரைகள் மற்றும் நேர்காணல்களை எழுதியுள்ளேன். பாரம்பரியம், பண்பாடு, கலையிலக்கியம், ஆற்றுகைகள், விளிம்பு நிலை, சாதீயம் சார்ந்து கட்டுரைகள் எழுதுபவர்களை தேடும்போது அவ்வரையறைக்குள் அகப்படுபவனாகவும் கட்டுரைகளின் விடயப்பொருள் தலைப்பினைப் பார்க்கும் போதும் வாசகர்களால் இனங்காணப்படுபவனாகவும் இருந்துகொண்டிருக்கின்றேன். ஒவ்வொரு வாரமும் தேசிய சுயாதீன செய்தித்தாள்களில் வெளி வருவதனால் அப்பெயரும் அவ்வெழுத்துக்களும் வாசகர்கள் மனதில் பதிந்துள்ளது. என்னை அறியாவிட்டாலும் என் எழுத்துக்களை வாசகர்கள் வாராந்தம் நுகர்ந்து கொண்டு என் எழுத்துக்களை அடையாம் கண்டுள்ளனர் என்பதை என்;னால் நிச்சயமாக கூற முடியும்.

மூத்த கவிஞர்கள், மூத்த எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், சமூக நலன்விரும்பிகள் மற்றும் பலர்,என் எழுத்து நடை நல்லதென்றும் வெகு லாவகமாக பகுப்பாய்வு செய்து எழுதுகின்றீர்கள் என்று நேரடியாக, தொலைபேசி வாயிலாக மற்றும் கடிதம் மூலம் குறிப்பிட்டுள்ளார்கள். அதுதான் எனது எழுத்துக்களுக்கான உயரிய விருதாக கருதுகின்றேன். உங்களது எழுத்துக்களை வாசித்துள்ளேன். அவ் எழுத்துக்களை நீங்கள் தான் எழுதியுள்ளீர்கள் என்று சற்றும் நம்ப முடியவில்லை. முதிர்ந்த படைப்பாளர் ஒருவரது படைப்பாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு உங்களது ஒவ்வொரு படைப்புகளையும் வாசித்துள்ளேன். ஒவ்வொரு கட்டுரைகளும் நேர்காணல்களும் நன்றாக உள்ளதென்றும் இப்பொழுதுதான் உங்களை நேரடியாக முதன் முதலாக கண்டுள்ளேன் என்று அவர்கள் மனம் மகிழ்ந்து கூறும் தருணங்கள் பொன்னான தருணங்களாகவும் விலை கொடுத்து வாங்க முடியாத வார்த்தைகளாகவும் இருக்கும். இதை விட ஒரு எழுத்தாளனுக்கு என்ன தேவை என்று பல தடவைகள் நினைக்க தோன்றியுள்ளது. படைப்பாளன் முக்கியமல்ல படைப்பின் தாக்கம் தான் தேவை என்பதை பல தடவை உணர்ந்துள்ளேன்.

**கேள்வி :- வருங்கால இளந்தலைமுறையினருக்கு கூற விரும்புவது?**

பதில் :- தமிழ் மொழியினை நேசியுங்கள், தமிழ் மொழியினை பரந்தளவில் ஆழமாக தேடியறிந்து கற்றுக் கொள்ளுங்கள். சாதிப்பவர்களாக தடம் பதிப்பவர்களாக நாளை வரலாற்றில் பேசப்படுபவர்களாக உருவாக வேண்டும். ஒவ்வொரு விடயங்களையும் வெகு ஆழமாக கற்க வேண்டும். தரம் ஒன்று தொடக்கம் சாதாரண தரம் வரை தமிழர்களாகிய நாங்கள் தாய்மொழியாகிய தமிழ் பாடங்களுள் உள்ளடங்கும் கவிதை, கட்டுரை, புனைகதை, நாடகம், நாவல், அழகியற் பாடங்கள், விமர்சனம், இலக்கியம் எனும் பல்வேறு விடயங்களை கற்கிறோம். கற்கும் காலத்திலயே அது பற்றி ஆழ அகலமாக தேடுவதனுடன் கவிதை, கட்டுரை, சிறுகதை எழுதுபவர்களாக பாடசாலைக் காலத்திலிருந்து உருவாக வேண்டும். உயர்தரத்தில் விஞ்ஞான, கணித, வர்த்தக தொழில்நுட்பத் துறையில் படிக்கும் காலங்களில் கூட ஆக்க இலக்கிய படைப்புகளை படைப்பவர்களாக இருக்க வேண்டும். எவ்வாறான வேலை செய்தாலும் படைப்பாளராகவும் இருக்க வேண்டும். மருத்துவர்கள் குறிப்பிட்ட வரையறைக்குள் தான் பேசப்படுவார்கள் ஆனால் படைப்பாளர்கள் உலகம் பூராகவும் பேசப்படுவார்கள்.

அழகியற் பாடங்களை கற்க செய்வதற்கு, ஆக்க இலக்கிய படைப்புகளை உருவாக்குவதற்கு பாடசாலையில் ஆசிரியர்களும் வீட்டில் பெற்றோர்களும் அது சார்ந்த பயிற்சியினை கற்பதற்கான பாதையினை அமைத்துக் கொடுக்க வேண்டும். ஒரு மாணவரை மருத்துவராகவும் படைப்பாளராகவும் உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமுமே காணப்படுகின்றது.

படைப்பாளர்கள நூல்களை வெளியீடுவது முக்கியமல்ல. அப்படைப்புகள் சமூகத்துக்கு மிக மிக தேவையான படைப்புகளாக இருக்க வேண்டும். கலைஞர்களும் கலைகளும் போற்றப்பட வேண்டும். கலைஞர்கள் படைபடபாளர்கள் சமூகத்தின் பிரதிநிதிகளாக செயற்பட்டு பக்கச்சார்பற்றவர்களாக தமது படைப்புகளை படைக்க வேண்டும்.

என்னை பத்திரிகைத் துறைக்குள் இழுத்து விட்ட பத்திரிகையாசிரியர்களுக்கும் பக்க பலமாக எந்நேரமும் எனது செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும் எனது பெற்றோர்களுக்கும் கலையிலக்கிய வாசகர்கள், ஆர்வலருக்கும், எனது தாய்மொழி தமிழ்மொழிக்கும் இத்தருணத்தில் நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



## கண்ணீரில் கதிரவன்

முகநூல் முழுதிலும்.......
முகம்தானே தெரிகிறது....

ஓய்வின்றி....ஓடியோடி...
உழைத்தது இதற்குதானா......?
'ஆய்' என்று அழுதுவிட்டேன்......
ஆண்டவனே என்ன இது.....

'வரியோடு வார்த்தையும்....
வருகிதில்லை நண்பா...'

அடிக்கடி அழைப்பெடுப்பாய்....
அன்றுதானே வந்து போனாய்.
துடிக்கிறது இதயமடா.....
தூயது உன் இதயமடா....

நேர்காணல்....
நேர்த்தியான செய்தி.....
ஊர் ஊராய் சென்று....
உறுதியான கட்டுரைகள்.
யார் மனமும் நோகாது.....
யாவருக்கும் பணி செய்தாய்.
பார் போற்றும் உன்னையே....
பெயர் வாழும் மண்ணிலே....

முகநூலில் மட்டுமல்ல.....
அகத்திலும் நிறைந்திருக்கும்...
அன்பரே...! செல்லுங்கள்.
அங்கே நாம் சந்திப்போம்.

ஆண்டவனின் பொற்பாதம்
ஆத்மா சாந்தி பெறும்.

**கதிரவன் த.இன்பராசா**

# தமிழால் இணைந்த ஊடகத்தோழனின் இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாக அமைந்துள்ளது : சிலோன் மீடியா போரம் இரங்கல்

(நூருல் ஹுதா உமர்)

துறைநீலாவணையினைச் சேர்ந்த ஆசிரியரும், ஊடகவியலாளருமான பாக்கியராசா மோகனதாஸ் கடந்த (23) இறைபதம் எய்தினார் எனும் செய்தி ஊடகத் துறைக்கு மட்டுமல்ல இன நல்லிணக்கத்திற்கும் சோகமான செய்தியாக அமைந்துள்ளது. துடிதுடிப்பான ஊடகவியலாளராக, நல்ல கலைஞராக வாழ்ந்து மறைந்த சக ஊடகவியலாளர் பாக்கியராசா மோகனதாஸ் இலைமறை காயாக இருந்த பலருக்கும் வெளிச்சம் கொடுத்த ஒருவராக இருந்தார் என சிலோன் மீடியா போரம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த செய்தியில் மேலும்,

இளம் ஊடகவியலாளரான இவர் குறுகிய காலத்தினுள் தனது ஊடகப் பயணத்தினை ஆரம்பித்து இலங்கையில் வெளிவருகின்ற பிரபல நாளிதழ்களில், இணையங்களுக்கு பல வருட காலமாக கட்டுரைகள், அரசியல்வாதிகளின் பேட்டிகள், கலைஞர்களின் படைப்புக்கள் என பல்வேறு விடயங்களை வெளிக்கொண்டு வந்த பல்துறைக் கலைஞரான இவருக்கு பல வருடங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாண இளம் ஊடகவியலாளர் விருது கிடைத்தமை இங்கு நினைவு கொள்ளவேண்டிய ஒன்றாக அமைந்துள்ளது.

சுகவீனம் காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார். இவரது உடல் எங்களை விட்டு மறைந்தாலும் அவரின் எழுத்துக்களும், நல்ல குணவியல்வுகளும் எங்களை விட்டு மறையாது. அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் சகலருடனும் சிலோன் மீடியா போரம் துக்கத்தை பகிர்ந்து கொள்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

